வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 26.03.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 86 பக்கங்கள் : 12




# தேர்தல் திருத்த சட்டம் மூலமாக தேர்தல்கள் பிற்போடப்படாது!

## நீதி அமைச்சர் விஜயதாஸ விளக்கம்



கொழும்பு, மார்ச் 26

**பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்தச் சட்டமூலங்களின் ஊடாக எந்தவொரு தேர்தலையும் பிற்போட எதிர்பார்க்கவில்லை என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் குறித்து மக்கள் அறிந்திருப்பது மிகவும் முக்கியமான ஜனநாயக அம்சமாகும். இந் நாட்டில் தற்போதுள்ள சட்டத்தின்படி, வன்புணர்வு என்பது பெண்ணின் மீதான அத்துமீறல் மட்டுமே. ஆனால், புதிய திருத்தங்கள் மூலம், பாலினத்தைப் பொருட்படுத்தாமல் சட்டத்தைப் நிறைவேற்ற முடியும். இங்கு, சட்டபூர்வமாகப் பிரிந்த மனைவிக்கு கணவன் செய்யும் பாலியல் வன்முறை வன்புணர்வாகக் கருதப்படுகிறது. பொலிஸ் காவலில், சிறை அல்லது வேறு ஒருவரின் காவலில் இருக்கும் போது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களுக்காக வழங்கப்படும்

11

## மைத்திரியிடம் 6 மணி நேரம் விசாரணை!



கொழும்பு, மார்ச் 26

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றப் புலனாய்வு பிரிவினர் (சி. ஐ. டி) நேற்று 6 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு மைத்திரிபால சிறிசேன குற்றப் புலனாய்வு பிரிவில் முன்னி லையாகியிருந்தார்.

விசாரணையின் பின்னர் பிற்பகல் 4.20 மணியளவில் அவர் அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் நடந்தன. இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்தது யார் என்று தனக்குத் தெரியும் என்று மைத்திரிபால கூறியிருந்தார். தென்னிலங்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## அரச ஊழியர்க்கு ஏப்ரல் முதல் ரூ. 10 ஆயிரம்


கொழும்பு, மார்ச் 26

2024 வரவு - செலவு திட்டத்தில் கூறியவாறு ஏப்ரல் மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்தத் தொகை ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

மேலும், குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணமாக வழங்கப்படவுள்ள 10 கிலோ அரிசி, எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் வழங்கப்படும்.

இதேவேளை, ஓய்வூதியக் கொடுப்பனவாக அதிகரிக்கப்பட்டுள்ள 2,500 ரூபாய் தொகை ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்படும்- என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)




பிரசித்தி பெற்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றவேளை...!

இளம்குடும்பஸ்தர் படுகொலை:

## பிரதான சந்தேகநபர் உட்பட மேலும் மூன்று பேர் கைது!

கொழும்பு, மார்ச் 26

வட்டுக்கோட்டை இளம் குடும்பஸ்தரான பவித்திரன் என்பவர் கடத்தப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்தில் பிரதான சந்தேகநபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேகநபராகக் கருதப்படும் - கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட காரின் உரிமையாளர் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். 38 வயது நபரான இவர் வட்டுக்கோட்டையை சேர்ந்தவராவார். மற்றைய இரு சந்தேக நபர்களும் கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் வைத்துக் கைது

11

## ஜனாதிபதி வேட்பாளரை இவ்வாரம் அறிவிப்போம்!

பொதுஜன பெரமுன கட்சி

கொழும்பு, மார்ச் 26

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் இந்த வாரம் பெயரிடப்படுவார் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, தம்மிக பெரேரா ஆகிய நால்வரில்

11

## அனைத்து தேவாலயங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

பொலிஸ் மா அதிபர் உத்தரவு

கொழும்பு, மார்ச் 26

புனித வெள்ளி தினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் உயிர்த்த ஞாயிறு தினமான 31ஆம் திகதியும் நாட்டின் சகல கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் வருபவர்களையும் அவர்கள் கொண்டு வரும் உடைமைகளையும் சோதனையிடுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பொலிஸ் பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி, சமூக பொலிஸ் குழுக்கள், அந்தந்த தேவாலயங்களின் பங்குத்தந்தை கள் மற்றும் அமைப்பாளர்களுடன் இணைந்து வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி -பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் பொலிஸ் மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## கெஹலியவுக்கு பிணை; சட்டமா அதிபர் எதிர்ப்பு!

கொழும்பு, மார்ச் 26

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியவுக்கு பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு சட்ட மா அதிபர் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சரின் மகளால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவுக்கு சவால் விடுத்து பூர்வாங்க ஆட்சேபனையை முன்வைப்பதாக சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம மன்றில் தெரிவித்தார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியவின் மகள் தனது தந்தையை நீதிமன்றம் பொருத்தமெனக் கருதும் பிணை நிபந்தனைகளின் அடிப்படையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றில் மறுசீ ராய்வு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது. ஆனால், மனு விண்ணப்பதாரர்

11

## மன்னார், வவுனியாவில் வெப்பநிலை உயரும்!

கொழும்பு, மார்ச் 26

மன்னார், வவுனியா உள்ளிட்ட 11 மாவட்டங்களில் வெப்பநிலை கடுமையாக அதிகரிக்கும் என்று தேசிய வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் பல இடங்களில் மழை பெய்தாலும் மனிதர்களால் உணரக்கூடிய வெப்பநிலையை விட நாட்டின் வெப்பநிலை அதிகரிக்கும் என்று எச்சரிக்கை

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

எந்தத் தேர்தல்கள் ஆனாலும் சிறிய கட்சிகள் பெரிய கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது எதற்காக என்பது புரிந்துகொள்ளக் கூடியதுதான். பெரிய கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் சொல்வாக்கைப் பயன்படுத்தி தாம் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்ற எண்ணத்தில்தான் என்பது தெரிந்த சங்கதி. அதனால்தான் பாராளுமன்றத் தேர்தலில் விருப்பு வாக்குப் பெறுவதற்காக ஒரே கட்சியில் போட்டியிடுபவர்கள்கூட தங்களுக்குள் அடிபட்டுக் கொள்கின்றனர்.

மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள பெரிய கட்சிகளுடன் கூட்டணியாக இருந்தபோது பல ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்றவர்கள் பின்னர் தனித்தோ அல்லது சிறிய அல்லது புதிய கூட்டணிகளில் போட்டியிட்டபோது குறைவான வாக்குகளைப் பெற்ற வரலாற்றுக்கு நாம் நமது கட்சிகளையே உதாரணமாக பார்க்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பங்காளிக் கட்சியாக இருந்த ஈ. பி. ஆர். எல். எவ். கட்சி கூட்டமைப்பாகக் கடைசியாக இரண்டாயிரத்து பதினைந்தில் போட்டியிட்டபோது அதன் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் பெற்ற விருப்பு வாக்குகள் அண்ணளவாக இருபத்தி ஒன்பதாயிரம். அந்தத் தேர்தலில் தோல்வி அடைந்த பின்னர் நடந்த உள்ளூராட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு தனது பலத்தைக் காட்டாமல், ஆனந்த சங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணியிலேயே போட்டியிட்டார். ஆனால், அதன் பின்னர் நடந்த பாராளுமன்ற தேர்தலில் சி. வி. விக்னேஸ்வரனுடன் கூட்டணி அமைத்துத் தனது கட்சியின் பெயரையே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்று பெயர் மாற்றிப் போட்டியிட்டார். அப்போது அந்த கூட்டணியில் போட்டியிட்டவர்களிலேயே அதிக காலம் எம். பியாக இருந்தவர் அவர்தான். ஆனால், அந்தத் தேர்தலில் அவரின் கூட்டணி முப்பத்தி ஐயாயிரம் வாக்குகளைப் பெற்றபோதிலும், அவருக்கு விழுந்த விருப்பு வாக்கு வெறும் ஏழாயிரத்தி எழுநூற்றி ஐம்பத்தி ஆறுதான். அதாவது விக்னேஸ்வரன், அருந்தவபாலன், சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், சுரேஸ் பிறேமச்சந்திரன் என்ற வரிசையிலேயே விருப்பு வாக்குகள் பெற்றனர்.

அவரது கட்சி தனித்துப் போட்டியிட்டிருந்தால் அவருக்கு விழுந்த அந்த ஏழாயிரம் வாக்குகளும் விழுந்திருக்குமா என்பது தெரியவில்லை.

இவை பற்றி இப்போது கூறுவதற்கு காரணம் வேறு ஒன்றுமல்ல, தெற்கில் இப்போது கூட்டணிகள் அமைப்பது பற்றியே எல்லோரும் பேசிக்கொண்டிருக்கின்றனர். ரணிலை ஜனாதிபதி தேர்தலில் வெல்ல வைப்பதற்காக ஒரு கூட்டணியும் சஜித்தை வெல்ல வைப்பதற்காக மற்றுமொரு கூட்டணியும் அமைக்கப்பட்டுவரும் அதேவேளையில், உதிரிகளாக ஆங்காங்கே இருக்கும் சிலரும் கடந்த வாரம் புதிய கூட்டணி ஒன்றுக்கு வித்திட்டிருக்கிறனர்.

இதுகாலவரை மகிந்த மற்றும் ராஜபக்ஷக்களின் இனவாத முகங்களாக இருந்து வந்த விமல் வீரவன்ஸவும் உதய கம்மன்பிலவும் இப்போது தமது தலைமையில் புதிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களோடு தனி ஆவர்த்தனம் செய்துகொண்டிருக்கும் சிலரும் சேர்ந்துள்ளனர். அவர்களின் முதலாவது மாநாட்டை சில தினங்களுக்கு முன்னர் நடத்தியுள்ளனர்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மகிந்தவின் பொதுஜன பெரமுனவில் அங்கம் வகித்தபோது கொழும்பு மாவட்டத்தில் விமல் விரவன்ஸ பெற்ற விருப்பு வாக்குகள் இரண்டரை இலட்சத்திலும் அதிகமானது.

ஆனால், அவரை முன்னிறுத்தி அமைக்கப்பட்டுள்ள அந்த புதிய கூட்டணி நடத்திய முதலாவது பிரசார மாநாட்டில், இரண்டாயிரம் பேரைக் கூட அவரால் கொண்டுவந்து காட்டமுடியவில்லை. அதேவேளை அவரோடு உதய கம்மன்பிலவும் இருக்கிறார். இப்போது அவர்களின் கூட்டணியில் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸையும் பறிகொடுத்துவிட்டு தனித்து நிற்கும் டலஸ் அழகப்பெருமவும் இணைந்திருக்கிறார். அவரைத்தான் நமது சம்பந்தன் இனவாதமற்ற ஒரே தலைவர் என்று ஒரு காலத்தில் புகழாரம் சூட்டினார். மைத்திரிபாலவால் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட தயாசிறி ஜயசேகர, ரணிலால் விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட றொசான் ரணசிங்க என்று சிலரும் அந்தக் கூட்டணியில் இணைந்திருக்கின்றனர்.

தனித்துக் களம் இறங்கினால், அடுத்த பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறமுடியுமா என்பதுதான் அவர்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ள பிரச்னை.!

**- ஊர்க்குருவி.**

# பாதாளக் குழு உறுப்பினர் ஐவர் கைது!

கொழும்பு, மார்ச் 26

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர்களை கைது செய்யும் விசேட நடவடிக்கையின் கீழ் மேலும் ஐந்து பாதாள உலகக் குழுவின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மினுவாங்கொடை பன்சிலுபுர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி மினுவாங்கொடை - பொரகொடவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, வாழைத்தோட்டம், செபஸ்ரியன் வீதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மேலும் ஒரு குற்றக் கும்பலைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரிடம் இருந்து 05 வாள்கள் மற்றும் 02 கிராம் 680 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர் வெளிநாட்டில் இருந்து வழிநடத்தப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் குழுவினர் கொலன்னாவ பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 03 கிராம் 190 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த ஒருவரை கைது செய்துள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், நேற்று முன் தினம் பிற்பகல் கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுமித்ரராம வீதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 168 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலை சேர்ந்த மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டாஞ்சேனை பிரதேசத்தை சேர்ந்த 35 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, நேற்று மாலை பொரளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறிசர உயன அடுக்குமாடி குடியிருப்புக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 2 கிராம் 230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் திட்டமிட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ)

# அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் நாளை பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

கொழும்பு, மார்ச் 26

மட்டக்களப்பு வைத்திய சாலை பணிப்பாளரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் உள்ள கதிரியக்க சிகிச்சை பிரிவுகளில் ஒரு நாள் அடையாளப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக அரச கதிரியக்க தொழிநுட்பவியலாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாளை நாடு முழுவதும் உள்ள கதிரியக்க சிகிச்சை பிரிவுகளில் பணியாற்றும், அரச கதிரியக்க தொழிநுட்பவியலாளர்கள் ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஈ.தர்மகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபாலவுக்கு கடிதம் ஒன்றின் ஊடாக அறியப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# கடந்த 20 நாட்களில் மாத்திரம் 131,684 சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, மார்ச் 26

இந்த மாதத்தின் கடந்த 20 நாட்களில் மாத்திரம் நாட்டுக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 131,684 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தியாவில் இருந்து 19,832 பேரும், ரஷ்யாவில் இருந்து 19,393 பேரும், ஜேர்மனியில் இருந்து 11,936 பேரும், சீனாவிலிருந்து 8,183 பேரும் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

(அ)

# கோப் குழுவுக்கு இனி எவரையுமே நியமிக்காது ஐக்கிய மக்கள் சக்தி!

கொழும்பு, மார்ச் 26

பொது விவகாரங்களுக்கான பாராளுமன்ற குழுவுக்கு (கோப்) ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து எவரும் நியமிக்கப்படமாட்டார்கள் என எதிர்கட்சியின் பிரதான அமைப்பாளரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



அந்தக் குழுவின் தலைவராக ரோஹித அபேகுணவர்தன இருக்கும் வரை தாம் தமது கட்சியிலிருந்து உறுப்பினர்களை நியமிக்கப் போவதில்லை எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவை கோப் குழுவின் தலைவராக நியமித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அண்மையில் கோப் குழுவின் 30 உறுப்பினர்களில் 11 பேர் இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பலாங்கொடையில் ஆண் சடலமாக மீட்பு!

கொழும்பு, மார்ச் 26

பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெயிகஸ்தலாவ பிரதேசத்தில் தனியார் காணியில் இருந்து ஆணொருவரின் நேற்று காலை சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலத்தை அடையாளம் காண்பதற்கு பொது மக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

ஈழநாடு
Eelanadu
26.03.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அனைவரும் ஓரணியில்

தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும். அதற்காகத் தொடர்ந்தும் உழைப்போம் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ரெலோவின் 11ஆவது தேசிய மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மகாநாட்டில் பேசிய அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் ஒற்றுமையையே வலியுறுத்தியிருக்கின்றனர்.

2009இல் யுத்தம் முடிவுற்றபோது தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தலைமைத்துவம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்தது. அனைத்துக் கட்சிகளையும் அரவணைத்து ஓர் அணியாக முன்கொண்டு செல்லும் வரலாற்று பொறுப்பை இரா. சம்பந்தன் ஏற்றிருந்தார். ஆனால், அவர் அதனை சரியாக முன்னெடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்னும் நிலைப்பாட்டை சிவில் சமூக பிரதிநிதிகளும் பங்காளிக் கட்சிகளும் முன்வைத்தபோது, அதனை தமிழ் அரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களை ஒரு தாய் கட்சியாகவே முன்னிலைப்படுத்திக் கொண்டனர். இதன் காரணமாகக் கூட்டமைப்பு வெளியில் பலமானதாகவும் உள்ளுக்குள் பலவீனமானதுமான ஒரு கூட்டணியாகவே இருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கை தமிழ் அரசுக் கட்சி வெளியேறியது. தற்போது மீண்டும் ஒற்றுமை பற்றி பேசப்படுகின்றது. முன்னர் எப்போதுமில்லாதவாறு தமிழர் அரசியல் மோசமானதொரு சூழலுக்குள் சிக்குண்டிருக்கின்றது. 2018இல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் இருந்து தமிழ்த் தேசிய வாக்குவங்கி பலவீனம டைந்து செல்கின்றது. இதற்கு பிரதான காரணம் தமிழ் கட்சிகளிடையே நிலவும் ஒற்றுமையின்மையாகும்.

ஓர் ஆளுமையுள்ள தலைவர் தோற்றம்பெறும்போது சிதறிக்கிடக்கும் அனைத்துத் தரப்புகளும் ஓரிடத்துக்கு வரும். ஆனால், தற்போதைய சூழலில் அவ்வாறானதோர் ஆளுமையுள்ள தலைமை இல்லை. அண்மைக்காலத்தில் அவ்வாறானதொரு தலைமை உருவாகுவதற்கான சூழலும் இல்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் கூட்டுத் தலைமை தொடர்பில் பேசப்படுகின்றது. இன்றுள்ள சூழலில் தனிக் கட்சி பெருமைகள் அர்த்தமற்றவை. தனிக்கட்சியாகத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய வல்லமையுடன் எந்தவொரு கட்சியும் இல்லை. ஏனெனில், இவ்வாறான கட்சிகள் அனைத்துமே குறிப்பிட்ட மாவட்டங்களின் வாக்கு வங்கியை நம்பியிருக்கின்ற கட்சி. இந்த நிலையில் கூட்டுத் தலைமையொன்றின் மூலம் மட்டுமே ஓரணியாக பயணிக்க முடியும்.

அடுத்து நடைபெறவுள்ள தேர்தல் தமிழ்த் தேசிய கட்சிகளை பொறுத்தவரையில் மிகவும் நெருக்கடியான தேர்தலாகவே இருக்கப் போகின்றது. இந்த நிலையில், ஓரணியாக செயல்படுவதன் மூலமே வடக்கு - கிழக்கில் அதிக ஆசனங்களைத் தக்கவைக்க முடியும். ஆசனங்களைத் தக்கவைப்பது என்பது வெறும் பதவி நிலைகள் தொடர்பானவை மட்டுமல்ல. மாறாக, அது வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்பதையே காண்பிக்கும்.

# வறட்சியான காலநிலை; 13 ஆயிரம் பேர் பாதிப்பு

*கொழும்பு, மார்ச் 26*

*நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக 9 பிரதேச செயலகப் பிரிவுகளில் 3956 குடும்பங்களைச் சேர்ந்த 13,312 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.*

*திவுலப்பிட்டிய பிரதேச செயலர் பிரிவில் 2351 குடும்பங்களைச் சேர்ந்த 7053 பேரும், மஹர பிரதேச செயலர் பிரிவில் 917 குடும்பங்களைச் சேர்ந்த 3655 பேரும், அத்தனகல்ல பிரதேச செயலர் பிரிவில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 79 பேரும், அத்தனகல்ல பிரதேச செயலர் பிரிவில் 3132 குடும்பங்களைச் சேர்ந்த 3132 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*வரக்காபொல பிரதேச செயலகப் பிரிவில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேரும், ருவன்வெல்ல பிரதேச செயலர் பிரிவில் 110 குடும்பங்களைச் சேர்ந்த 550 பேரும், ஐயந்தோட்டை பிரதேச செயலர் பிரிவில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 289 பேரும், தெஹியோவிட்ட பிரதேசத்தில் 160 குடும்பங்களைச் சேர்ந்த 672 பேரும். கலிகமுவ பிரதேச செயலகப் பிரிவில் 175 குடும்பங்களைச் சேர்ந்த 637 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் கூறியுள்ளது.*

*(அ)*

# பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறை 477 முறைப்பாடுகளின் விசாரணைகள் பூர்த்தி!

*கொழும்பு, மார்ச் 26*

*பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடுகள் வழங்குவதற்கு, அறிமுகம் செய்யப்பட்ட 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற 477 முறைப்பாடுகளின் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.*

*ஜனவரி மாதம் 4 ஆம் திகதியிலிருந்து மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக 1,077 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.*

*அவற்றில் 42 முறைப்பாடுகள் தொடர்பில், நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் 8 முறைப்பாடுகள் மத்தியஸ்த சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.*

*மேலும், 550 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*பொலிஸ் நிலையங்களுக்கு நேரடியாக சென்று முறைப்பாடுகள் வழங்க முடியாத சிறுவர்கள் மற்றும் பெண்கள் 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இரகசியமாக முறைப்பாடுகளை வழங்க முடியும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*(அ)*

# பிரான்ஸ் பிரஜை திருமலையில் மரணம்

*திருமலை, மார்ச் 26*

*பிரான்ஸில் இருந்து திருகோணமலைக்கு சுற்றுலா வந்த நபரொருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.*

*கடந்த 18ஆம் திகதி 44 பேருடன் இலங்கைக்கு சுற்றுலா வந்தவர்களில் ஒருவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மைக்கல் மார்சல் என்ற 57 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*திருகோணமலை- அலஸ் தோட்டம் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கி இருந்த போது நேற்று முன் தினம் அவர் சுகவீனமடைந்துள்ளார்.*

*இதனை அடுத்து அவசர நோயாளர் காவு வண்டி மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.*

*இந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.*

*மரணம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.*

*(அ)*

# உள்ளூர் பால் மாவின் விலை குறையாது

*கொழும்பு, மார்ச் 26*


*உள்ளூர் பால் மாவின் விலையை குறைக்க இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என உள்ளூார் பால் மா உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*அதன்படி உள்ளூர் பால் மாவின் விலையை குறைப்பது உள்ளூர் பால் பண்ணையாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என சங்கம் தெரிவித்துள்ளது.*

*இதேவேளை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால் மாவின் விலையை 150 ரூபாவினால் குறைக்க வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்ததுடன், 400 கிராம் பால் மா பொதி ஒன்றின் விலை 60 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*

*(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் ராஜ தந்திரத்தால் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**இடபம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும்.

**மிதுனம்**
எதிர்பார்த்ததில் சில தள்ளிப்போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். வேலைகளை விரைந்து முடிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப்பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**துலாம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும்.

**விருட்சிகம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மதிப்புக் கூடும் நாள்.

**தனுசு**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன விஷயங்கள் முடியும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உயரதிகாரிகள் உங்களை குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும்.

# மோடி மீண்டும் பிரதமராகக்கூடாது அவரைத் தோற்கடிக்க வேண்டும்!

## பா. ஜ. க. மூத்த தலைவர்

மதுரை, மார்ச் 26

மீண்டும் மோடி பிரதமராக வரக்கூடாது, அவரைத் தோற்கடிக்க வேண்டும் என மதுரையில் பா. ஜ. க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,

தமிழகத்தில் போட்டியிடும் பா. ஜ. க. வேட்பாளர்களில் நயினார் நாகேந்திரன் கட்டாயம் வெற்றி பெறுவார். கோவையில் போட்டியிடும் பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை வெற்றி பெறுவது பற்றி தெரியாது. தமிழகத்தில் தி. மு. க., பா. ஜ. க. எனக் களம் மாறி உள்ளதா என்றால் கனவு எல்லோருக்கும் இருக்கிறது. அது நடக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

வேட்பாளர்களை எல்லா இடத்திலும் நிறுத்தலாம். அமைப்பு வலுவாக இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். பணத்தை கொடுத்து விளம்பரம் செய்தால் மட்டும் போதாது. மக்கள் நம்ப வேண்டும். சீனா, இந்தியாவை ஆக்கிரமிப்பு செய்ததை பிரதமர் மோடி தடுக்கவில்லை. பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ளோம். மாலைதீவுடன் பிரச்னை உள்ளது. மோடி ஒன்றும் செய்யவில்லை.

நான் தி. மு. க. ஆட்சியை கவிழ்த்தவன். அதுவும் 2 முறை கவிழ்த்தவன். தற்போது கவிழ்க்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. மோடி பிரதமராக மீண்டும் வரக்கூடாது. அவரைத் தோற்கடிக்கவேண்டும் - என்றார். (ஐ)

# கொடநாடு கொலை வழக்கு குற்றவாளிகளை தண்டிப்போம்!

## பா. ஜ. கட்சியும் அறிவிப்பு

தஞ்சாவூர், மார்ச் 26

மக்களவைத் தேர்தலில் பா. ஜ. க. வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும், கொடநாடு கொலை வழக்கில் சி. பி. ஐ. விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவோம் என தஞ்சாவூர் மக்களவைத் தொகுதி பா. ஜ. க. வேட்பாளர் கருப்பு முருகானந்தம் தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தலில், அ. தி. மு. க மற்றும் அ.தி.மு.கவில் இருந்து பிரிந்துசென்ற அணிகளையும் சேர்த்து மிகப்பெரிய கூட்டணி அமைக்க முயற்சி எடுத்தோம். ஆனால், கொடநாடு வழக்கில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு தொடர்பு உள்ளதற்கான ஆதாரங்களை வைத்து மிரட்டி, கூட்டணி அமையவிடாமல் தி.மு.க. தடுத்துவிட்டது.

இதேபோல, கடந்த சட்டப் பேரவைத் தேர்தலிலும் உள்துறை அமைச்சர் அமித்ஷா அ. தி. மு. க. அணிகளை ஒருங்கிணைத்து பெரிய கூட்டணி அமைக்க முயற்சி எடுத்தார். அப்போதும் பழனிசாமி ஒப்புக்கொள்ளவில்லை.

இந்த மக்களவைத் தேர்தலில் பா. ஜ. க. மாபெரும் வெற்றி பெற்று, 3ஆவது முறையாக பிரதமர் மோடி தலைமையில் ஆட்சி அமைக்கும். அதன்பிறகு கொடநாடு வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி, குற்றவாளிகளுக்கு கண்டிப்பாக தண்டனை பெற்றுத்தருவோம். தமிழகத்துக்கு சிறந்த திட்டங்களையும் கொண்டு வருவோம் - என்றார்.

# எதிர் வேட்பாளர் பிரபாகரன் எனக்கும் மகன் போன்றவரே

## ராதிகா சரத் குமார் தெரிவிப்பு



சென்னை, மார்ச் 26

தனக்கு எதிராக போட்டியிடும் விஜயகாந்த் மகன் விஜயபிரபாகரன் தனக்கும் ஒரு மகன் போலத்தான். அவர் நன்றாக இருக்க வேண்டும் என விருதுநகர் பாராளுமன்றத் தொகுதி வேட்பாளர் ராதிகா சரத்குமார் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு தமிழ்நாட்டில் எதிர்வரும் ஏப்ரல் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில், பா. ஜ. க. சார்பில் ராதிகா சரத்குமார் விருதுநகர் தொகுதியில் களமிறங்குகிறார். அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில்,

"விருதுநகர் பாராளுமன்ற தொகுதியை நான் தேர்ந்தெடுக்கவில்லை .பாஜக தலைமையில் இருந்து தேர்ந்தெடுத்து என்னை வேட்பாளராக நிறுத்தியுள்ளனர். விருதுநகர் தொகுதி மக்களுக்கு செய்வதற்கு நிறைய உள்ளது. மக்களுக்கு தேவையானதை நான் செய்வேன்.

விஜயகாந்த் மகன் விஜயபிரபாகரன் எனது மகளுடன் படித்த பையன். எனக்கும் ஒரு மகன் போலத்தான். அவர் நன்றாக இருக்க வேண்டும். நடக்க இருக்க கூடிய தேர்தல் சட்டமன்றத் தேர்தல் அல்ல பாராளுமன்றத் தேர்தல். நாடு இந்த தேர்தலில் நமக்காக என்ன செய்ய உள்ளது என்பதைத்தான் பார்க்க வேண்டும் - என்றார். (ஐ)

# அ.தி.மு.க. - தே.மு.தி.க. கூட்டணி சட்டமன்ற தேர்தலிலும் தொடரும்

## பிரேமலதா அறிவிப்பு

திருச்சி, மார்ச் 26

அ.தி.மு.க. - தே.மு.தி.க. கூட்டணி 2026 சட்டமன்ற தேர்தலிலும் தொடரும் - என்று கூறியுள்ளார் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்.

திருச்சியில் அ.தி.மு.கவின் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டத்தில் அவர் பேசியவை வருமாறு,

அ.தி.மு.க. - தே.மு.தி.க. கூட்டணி என்பது வெற்றிக் கூட்டணி. அ.தி.மு.க. - தே.மு.தி.க. கூட்டணி 2026 சட்டமன்ற தேர்தலிலும் தொடரும். உறுதியாக - இறுதியாக என்றைக்கும் எங்கள் கூட்டணி தொடரும்.

முதலமைச்சராக இருந்த போது, எடப்பாடி பழனிசாமி கொரோனா தொற்று, வெள்ளம் போன்ற சூழ்நிலைகளை சிறப்பாக கையாண்டார்.

சென்னையில் கடந்த ஆண்டு மழை வெள்ள பாதிப்பு ஏற்பட்டபோது, தி. மு. க. அரசு அதை சிறப்பாக கையாளவில்லை - என்றார். (ஐ)

### ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்

# பாராளுமன்ற தேர்தல் முறையை மாற்றுவதற்கு இடமளியோம்

## கனடாவில் அனுரகுமார திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 26

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்களை மேற்கொள்வதை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளாது என அதன் தலைவர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான உத்தேச அரசமைப்பு சீர்திருத்தங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அனுமதிக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கனடாவில் இலங்கை வாழ் சமூகத்தினர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த தருணத்தில் தேசிய தேர்தலை தவிர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

தாங்கள் அதிகாரத்தை இழக்கப்போகின்றோம் என்ற அச்சம் காரணமாகவே அவர்கள் இவ்வாறு செய்கின்றனர்.

அதிகாரத்தை மக்களின் கரங்களில் ஒப்படைப்பது குறித்து அவர்கள் அஞ்சுகின்றனர். இதன் காரணமாகவே தேர்தல்களை நடத்த தயங்குகின்றனர்.

புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்காக அரசாங்கம் தற்போது அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் இதனை முன்னெடுப்பதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என உத்தரவாதம் வழங்குகின்றோம்-என்றார். (அ)

# மைத்திரிபாலவை கைது செய்யலாம்!

## சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 26

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவை கைது செய்வதற்கு போதுமான காரணங்கள் உள்ளன என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் குற்றவியல் நடைமுறைச்சட்டம் தண்டனை சட்டம் பயங்கரவாத தடைச் சட்டம் உள்ளிட்டவற்றின் விதிகளை மீறியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள், ஏன் அவர் இந்த முக்கியமான விடயத்தை மூன்று வாரங்கள் மறைத்து வைத்தார் என கேள்வி எழுப்பியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

சி.ஐ.டியினரும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் சட்டமா அதிபரும் சி.ஐ.டியினரும் மைத்திரிபால சிறிசேனவின் கூற்றுக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரும் மனுவை மேல்முறையீட்டுநீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயார் என சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார தெரிவித்தார்.

குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் 21 ஆவது பிரிவின் கீழ் சிறிசேன குற்றம் செய்துள்ளார். அவரை உடனடியாக கைது செய்யவேண்டும்-விசாரணை செய்யவேண்டும் என உண்மை மற்றும் நீதிக்கான சட்டத்தரணிகள் அமைப்பின் சட்டத்தரணி அமில உடவத்த தெரிவித்தார்.

சிறிசேன குற்றமிழைத்துள்ளார். அவரை உடனடியாக கைதுசெய்து தடுத்துவைத்து விசாரணை செய்யலாம். சி.ஐ.டியினர் என்ன செய்கின்றனர் என பார்ப்பதற்காக நாங்கள் காத்திருக்கின்றோம் எனவும் அவர் கூறினார். (அ)

# மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதித்த ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 26

சிரேஷ்ட அதிகாரிகளின் பெயர்களைப் பயன்படுத்தி இஸ்ரேலில் விவசாயத் துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

குறித்த நபர் கொழும்பு 07, விஜேராம மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதுடன் அவர் வைத்தியராகவும் தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார்.

சந்தேக நபர் நாரஹேன்பிட்டியில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மக்களை அழைத்துள்ளார்.

சந்தேக நபர் 9 பேரிடம் இருந்து 7 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாகவும், அவருக்கு பணம் வழங்கிய நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை கொழும்பு இல 5 நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர், அவரை ஏப்ரல் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்த மோசடிக்கு உதவிய அவரது மனைவி, விசாரணை அதிகாரிகளை தவிர்த்து தலைமறைவாகியுள்ளார். அவரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

### பாதாள குழுக்களுடன் தொடர்பு;

# அகலவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீது விசாரணை

கொழும்பு, மார்ச் 26

பாதாள உலக ஆயுதக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்து அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டார் எனக் கூறப்படும் அகலவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹெட்டியாராச்சிக்கு எதிராக விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

டுபாயில் தலைமறைவாகியுள்ள பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் தர்மசிறி என்பவருக்கும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஹெட்டியாராச்சிக்குமிடையில் இடம்பெற்ற உரையாடல் தொடர்பான ஒலிநாடாக்கள் தற்போது சமூக ஊடகங்களில் பரவி வருவதுடன் இந்த அதிகாரியின் பாதாள உலக தொடர்புகள் அம்பலமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அதிகாரியின் பாதாள உலக தொடர்புகள் தெரிய வந்ததையடுத்து, அப்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்த ரொஹான் பிரேமரத்ன, அவருக்கு எதிரான விசாரணையை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தெங்கு பயிர்ச் செய்கை சபையின் முன்னாள் முகாமையாளர் கைது!

கொழும்பு, மார்ச் 26

ஊழியர் நம்பிக்கை நிதிய பணத்தை மோசடி செய்தமை தொடர்பில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் முன்னாள் பொது முகாமையாளர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஏழு கோடி எழுபத்தேழு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளார்.

தெல்கொட உடுபில பிரதேசத்தைச் சேர்ந்த (வயது-64) கே.டி.லயனல் தர்மசிறி என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் நிதி மற்றும் வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# வேலையில்லா பிரச்னை 4.3 சதவீதமாக வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 26

கடந்த மூன்று மாதங்களில் பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கு முன்னர் 4.7 வீதமாக காணப்பட்ட இலங்கையின் வேலையில்லா பிரச்னை தற்போது 4.3 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இது மூன்றாம் காலாண்டு வளர்ச்சியை விட மூன்று மடங்கு அதிகமாகும். சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள




அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் காணப்பட்ட அந்நிய செலாவணி தட்டுப்பாட்டிலிருந்து நாடு மீண்டு வரும் நிலையில், கடந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் 1.6 சதவீதமாக இருந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த ஆண்டின் நான்காம் காலாண்டில் 4.5 சதவீதமாக விரிவடைந்துள்ளது. (அ)

# மந்தபோசணையை இல்லாது ஒழிப்பதுதான் அரசின் இலக்கு!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

மந்த போசணையை இல்லாது ஒழிப்பதே தமது இலக்கு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முதலாம் தரம் முதல் ஐந்தாம் தரம் வரையிலான மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்வு நாரஹேன்பிட்டி பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்படி 9,134 அரச பாடசாலைகளிலும் 100 இற்கும் குறைவான மாணவர்களை கொண்டுள்ள பாடசாலைகளிலும் உணவு வழங்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்காக குறைந்த தொகையே ஒதுக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அந்த தொகை போதுமானதல்லவென அந்த சங்கங்கள் குற்றஞ்சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மக்கள் மனதை வென்ற ஒரே தலைவர் ரணிலே!

## அவர்தான் அடுத்த ஜனாதிபதி என்கிறார் அமைச்சர் மனுஷ




**கொழும்பு, மார்ச் 26**

**இலங்கையில் தற்போது இருக்கும் மூத்த அரசியல் தலைவர்களில் சகல இன மக்களினதும் மனதை வென்ற ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்குகின்றார். அவர்தான் அடுத்த ஜனாதிபதியாகவும் வருவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் காலம் நெருங்கும் வேளையில் சிலர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி வருகின்றார்கள். அவர்கள் என்ன நோக்கத்துக்காக அப்படிச் சொல்கின்றார்கள் என்று தெரியவில்லை.

ஆனால், எந்தத் தேர்தல் நடந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றிநடை போடும். எமது கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த ஜனாதிபதியாகவும் வருவார்.

ரணில் விக்கிரமசிங்க கட்சி சார்பு வேட்பாளர் இல்லாமல் பொது வேட்பாளராகவும் எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடச் சந்தர்ப்பம் உண்டு.

அவர் எந்த வழியில் போட்டியிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே பெருமை. எமது கட்சிக்கு நாள்தோறும் மக்களின் ஆதரவு அதிகரித்து வருகின்றது. அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான மூவின மக்களின் ஆதரவும் பெருகி வருகின்றது-என்றார். (அ)

# யாழில் இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகளுடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 26

பருத்தித்துறை பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகளை விற்பனை செய்த பெண் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் புலோலி தெற்கு பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் என்பதுடன் இவரிடமிருந்து 118 சட்டவிரோத சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புங்குடுதீவில் விபத்தில் சிக்கியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 26

புங்குடுதீவில் ஆலயத்துக்கு சென்றுவிட்டு, நடந்து வீடு திரும்பி கொண்டிருந்தவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவை சேர்ந்த ஜோசன் கஜேந்திரன் (வயது 46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவுப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு கடந்த 20 ஆம் திகதி சென்று விட்டு, தனது வீடு நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தவர் மீது வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்தவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (அ)

# ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடையும்

கொழும்பு, மார்ச் 26

எதிர்வரும் காலங்களில் ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடையும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

அத்துடன், இலங்கைக்கு கிடைக்கும் அந்நிய செலாவணியின் அளவு கணிசமாக அதிகரிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் பெரும்பாலான தொழிலாளர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு செல்லவுள்ள நிலையில், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், தற்போது அமெரிக்க டொலர் ஒன்றுக்கு 299 இலங்கை ரூபாவினை செலுத்த வேண்டியுள்ள நிலையில், எதிர்காலத்தில் இதன் பெறுமதி 250 முதல் 260 ரூபா வரை குறைவடையும் என பேராசிரியர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன்களும் மானியங்களும் ரூபாவின் பெறுமதி வலுவடைவதற்கு மற்றொரு காரணமாகும்.

இருப்பினும், எதிர்காலத்தில் இலங்கைக்கு கிடைக்கும் டொலரின் அளவு குறைவடையும் பட்சத்தில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும் என பேராசிரியர் வசந்த அத்துக்கோரள சுட்டிக்காட்டினார். (அ)

# அதிக வெப்பத்தால் வீடுகளுக்கு படையெடுக்கும் விஷ ஜந்துகள்

## வனவிலங்கு திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 26

அதிகரித்த வெப்பம் காரணமாக ஊர்வன மற்றும் நிலநீர் வாழ் உயிரினங்கள் வீடுகளை நோக்கி படையெடுப்பதாகவும் இவ்வாறான நேரங்களில் பொது மக்கள் பீதியடைய வேண்டாம் என வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் நீடிக்கும் வறண்ட காலநிலை காரணமாக வன விலங்குகள் மற்றும் மற்றும் தாவரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஊர்வன மற்றும் நிலநீர் வாழ் உயிரினங்கள் தங்கள் உடல் வெப்பத்தைக் கட்டுப்படுத்துவது மற்றும் வெப்பத்திலிருந்து தப்பிக்க மனித குடியிருப்புகளை அடைய வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

இதன்படி, மனித வாழ்விடங்களுக்கு அருகில் காணப்படும் ஊர்வனவற்றை கையாளும் போது எச்சரிக்கையுடன் இருக்குமாறு வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் அறிவுறுத்துகின்றது.

வறண்ட காலநிலை மற்றும் நீர் பற்றாக்குறை காரணமாக விலங்குகள் மனித வாழ்விடங்களில் தஞ்சம் புகுவதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார தெரிவித்தார்.

இயற்கை வாழ்விடங்கள் அழிக்கப்படும் போது, விலங்குகள் மனித குடியிருப்புகளுக்குள் நுழைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டங்கள், வாகனம் நிறுத்தி வைக்குமிடங்கள், கழிவறைகள், சமையலறைகள் அல்லது உட்புறத் தோட்டங்களுக்குள் நுழையும் ஊர்வன மற்றும் நிலநீர் வாழ் உயிரினங்களை கண்டு பீதி அடைய வேண்டாம் என்று அவர் கூறினார். (அ)

# பாடசாலை மடிக் கணினிகளை திருடிய இரு மாணவர்கள் கைது

கொழும்பு, மார்ச் 26

பேருவளை பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் ஸ்மார்ட் வகுப்பறையை உடைத்து 12 மடிக்கணினிகளைத் திருடிய அதே பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

அடுத்த வருடம் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள 16 வயதுடைய மாணவர்கள் இருவர் மற்றும் பாணந்துறை மற்றும் பாதுக்க பிரதேசங்களில் வசிக்கும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் போயா தினத்தன்று மடிக்கணினிகள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலை மாணவர்கள் இருவர் மடிக்கணினிகளை விற்பனை செய்ய முயற்சிப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், திருடப்பட்ட 12 மடிக்கணினிகள் பாதுக்க பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# கைதியிடமிருந்து கைபேசி மீட்பு

கொழும்பு, மார்ச் 26

யுக்திய நடவடிக்கையின் போது பூஸா சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரின் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கைத்தொலைபேசிகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

பூஸா சிறையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே கைதியிடமிருந்து கைத்தொலைபேசிகள், சார்ஜர்கள், பற்றரிகள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்களை மீண்டும் பணிக்கு அமர்த்த தீர்மானம்



கொழும்பு, மார்ச் 26

ஆங்கில வழி ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஓய்வுபெற்ற ஆங்கில வழி ஆசிரியர்களை மூன்று வருட காலத்திற்கு இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த ஆசிரியர்கள் தரம் ஆறு முதல் தரம் 11 வரையான வகுப்புகளுக்கு உள்வாங்கப்படஉள்ளதுடன், தேவைகள் தொடர்பாக அனைத்து மாகாணங்களிலிருந்தும் தகவல் அறிய அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

தேசிய பாடசாலைகள் பற்றிய தகவல்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

தகவல் கிடைத்தவுடன் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இந்த சுற்றறிக்கையின்படி, இந்த ஆசிரியர்களுக்கு ஓய்வு பெறும்போது பெற்ற சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். (அ)

# பாடசாலைக் கல்வி, பரீட்சை முறைகளில் பெரும் மாற்றம்!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

**கொழும்பு, மார்ச் 26**
**பாடசாலை கல்வி மற்றும் பரீட்சை முறையை மாற்றியமைப்பது குறித்து கவனம் செலுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு - நாரஹேன்பிட்டி சுஜாதா மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற "2024 பாடசாலை உணவுத் திட்டம்" நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த சில ஆண்டுகளில், செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தை ஆரம்பப் பாடசாலைகள் மட்டுமின்றி, உயர்கல்வி கற்பிக்கப்படும் அனைத்துப் பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்த உள்ளோம்.

நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னேற வேண்டும். அந்த தொழில்நுட்ப அறிவை பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும். அதன்படி, பாடசாலை கல்வி மற்றும் பரீட்சை முறையை மாற்றியமைப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்.



இந்த நவீன தொழில்நுட்ப அறிவோடு பிள்ளைகளின் ஆங்கில மொழி அறிவையும் வளர்க்க வேண்டும். அதற்கான திட்டங்களையும் வகுத்துள்ளோம்-என்றார். (அ)

# வெங்காயத்தின் விலை அதிகரிக்கும் அபாயம்

கொழும்பு, மார்ச் 26
வெங்காய ஏற்றுமதிக்கான தடையை இந்தியா காலவரையின்றி நீடிப்பதால், நாட்டில் வெங்காயத்தின் விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பரில் இந்தியா விதித்த தடை வரும் 31ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்தது.

இந்த நாட்டில் வெங்காயத்தின் வருடாந்த நுகர்வு சுமார் 250,000 மெற்றிக் தொன்கள் மற்றும் அதில் 50 வீதத்துக்கும் அதிகமானவை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்தியா விதித்துள்ள இந்தத் தடையால் பல நாடுகளில் வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரித்துள்ள நிலையில், ஏற்கனவே சந்தையில் ஒரு கிலோ வெங்காயம் 600 முதல் 700 ரூபா



வரை விற்பனை செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 375 ரூபா தொடக்கம் 400 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையில் நுகர்வோருக்கு கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

# கல்வி நிலையத்தில் மோதல் ஒன்பது மாணவர் படுகாயம்

கொழும்பு, மார்ச் 26
குருநாகல், இப்பாகமுவ பிரதேசத்தில் தனியார் கல்வி நிலையத்தில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற மோதலில் 05 மாணவிகளும் 04 மாணவர்களும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொகரெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு மாணவியும் மூன்று மாணவர்களும் குருநாகல் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

04 மாணவிகள் மற்றும் ஒரு மாணவர் பொல்கொல்ல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதலுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொகரெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பௌத்த மதத்துக்கு பங்கம் ஏற்படுத்தும் போலி தேரர்கள் குறித்து விசாரணைகள்

கொழும்பு, மார்ச் 26
புத்தரின் குணாதிசயங்கள் மற்றும் பௌத்த மத போதனைகள் என்பவற்றுக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படும் போலி தேரர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்டோரின் முறைப்பாடுகளின் அடிப்படையில் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மதம்சார் விடயங்களை பாதிக்கும் பல்வேறு சம்பவங்கள் குறித்து புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில் அது தொடர்பான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இந்த சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்டோர் மகாநாயக்க தேரர்களுக்கு அறிவிக்கவுள்ளனர்.

இவ்வாறான போலி தேரர்களின் செயற்பாடுகள் குறித்து பௌத்த மதம் தொடர்பான பல்வேறு அமைப்புகளினாலும் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. (அ)

# சுவிஸில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட தமிழ் குடும்பம்

கொழும்பு, மார்ச் 26
ஐரோப்பிய நாடுகளில் புகலிட கோரிக்கையாளர்களின் நெருக்கடி அதிகரித்துள்ள பின்னணியில் சுவிட்ஸர்லாந்தில் புகலிட கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழ் குடும்பம் ஒன்று நாடுகடத்தப்பட்டுள்ளது.

சுவிட்ஸர்லாந்து நாட்டின் குடிவரவு, குடியகல்வு சட்டத்திற்கு அமைவாகவே இந்த குடும்பத்தினர் நாடு கடத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தந்தை, தாய் மற்றும் இரு பிள்ளைகள் இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு இந்த தம்பதி சுவிட்ஸர்லாந்து சென்றிருந்த நிலையில், அங்கு புகலிடக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், இந்த தம்பதியினருக்கு அங்கு இரு குழந்தைகள் பிறந்துள்ளன. தற்போது ஏழு மற்றும் மூன்று வயதாகும் குழந்தைகளுடன் இந்த குடும்பத்தினர் நாடு கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பிரித்தானியா, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் கனடா, அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் புகலிட கோரிக்கையாளர்களின் நெருக்கடி தீவிரமடைந்துள்ளது.

புகலிட கோரிக்கையாளர்களின் வருகையை கட்டுப்படுத்த இந்த நாடுகளில் கடுமையான விசா கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பலரின் புகலிட கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில், நாடு கடத்தப்படுவதும் அதிகரித்துள்ளன. (அ)

# பால்மா விலை குறைப்பு போதுமானது இல்லை!

## நுகர்வோர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 26
நிலவும் வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் குறைக்கப்பட்ட பால்மாவின் விலை போதுமானதல்ல என்று நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் நிறையுடைய பால் மா பைக்கெற்றின் விலை 150 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், 400 கிராம் நிறையுடைய பால் மா பைக்கெற்றின் விலை 60 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளதன் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், பால்மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளமையை அடுத்து பால் தேநீரின் விலையை 80 ரூபாய் வரை குறைக்குமாறு தேசிய பாவனையாளர் சபை உணவக உரிமையாளர்களிடம் வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# கடலில் மூழ்கி மாணவி பலி!

கொழும்பு, மார்ச் 26
அம்பாந்தோட்டைக் கடலில் மூழ்கி பாடசாலை மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த ஆர். சுசந்திகா என்ற 18 வயது மாணவியே உயிரிழந்துள்ளார்.

உறவினர்களுடன் அம்பாந்தோட்டைக்குச் சுற்றுலா சென்ற மேற்படி மாணவி, கடலில் குளித்தபோதே நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளார்.

அவரின் சடலம் அங்கு நின்றவர்களால் உடனே மீட்கப்பட்டது.

பொலிஸ் விசாரணைகளின் பின்னர் சடலம் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (அ)

# 24 மணித்தியாலங்களில் 906 பேர் கைது

கொழும்பு, மார்ச் 26
திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவினரில் இருவர் கொட்டாஞ்சேனை மற்றும் பொரளை ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

35 மற்றும் 38 வயதான இருவரே சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நள்ளிரவு 12.30 உடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 906 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 862 பேர் போதைப்பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களாவர்.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் விசேட அதிரடி படையினரினால் பட்டியலிடப்பட்டிருந்த 21 பேர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் குற்றப்பிரிவினரால் பட்டியலிடப்பட்டிருந்த 44 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது, ஹெரோயின், ஐஸ், கஞ்சா, மாவா, போதைவில்லைகள் உள்ளிட்ட பெருமளவான போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த தமிழ் பேசும் இளைஞர்கள் முன்னிற்பது மகிழ்ச்சியளிக்கிறது

## தென் கிழக்கு பல்கலை துணைவேந்தர் றமீஸ் அபூபக்கர்

அம்பாறை, மார்ச் 26

**சமூக நல்லிணக்கத்தை, ஒற்றுமையை ஏற்படுத்த தமிழ் பேசும் இளைஞர்கள் முன்னின்று செயற்படுவது மகிழ்ச்சியளிக்கிறது என்று தென் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.**

**இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக இதழியல்துறை மாணவர்களின் ”சமூக நல்லிணக்க இப்தார்” இதழியல் மாணவனும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஆசிரியருமான எஸ். அஷ்ரப்கான் தலைமையில், சாய்ந்தமருதில் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்றது.**

இங்கு விசேட விருந்தினர்களாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீட பிடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாசில் மற்றும் சிரேஷ்ட பேராசிரியரும் இதழியல் கற்கைத் துறையின் இணைப்பாளருமான ரமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் உட்பட அம்பாறை, மட்டக்களப்பு, கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்த இதழியல் துறை தமிழ் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு விசேட விருந்தினர்களில் ஒருவராக கலந்து சிறப்பித்த துணைவேந்தர் றமீஸ் அபூபக்கர் தொடர்ந்தும் உரையாற்றும் போது,

சமூகங்களிலே பல்வேறுபட்ட பிரச்னைகள், சிக்கல்கள் மலிந்து காணப்படுகின்ற இந்த சந்தர்ப்பத்தில் இன நல்லிணக்கத்தின் ஊடாக இரு சமூகங்கள் மத்தியிலும் ஒற்றுமையை கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியில் பலர் செயல்பட்டாலும், இரு சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி இளைஞர்கள் முன் வந்து செயல்படுவது மகிழ்ச்சியை தருகின்றது.

பல சந்தர்ப்பங்களில் சமூக நல்லிணக்கம் என்பது வெறும் செயற்பாடுகளற்ற கூட்டங்கள் என்றும் அமைப்புக்கள் கூடி கலைவதுமாக இருப்பதையே நாம் அதிகமாக காண்கின்றோம்.



இவ்வாறு இருப்பதனால் நாம் பூரணமான ஒற்றுமையை அமைதியை எமது பிரதேசங்களில் காண முடியாதுள்ளது. என்றாலும் சில அமைப்புக்கள் பல்வேறு முயற்சிகளை செய்து வருவது பாராட்டப்பட வேண்டியதே.

ஆனால் துடிப்புள்ள தமிழ் பேசும் இளைஞர்கள் முன் வந்து சமூகங்களை ஒன்றிணைக்கின்ற கருத்து முரண்பாடுகளற்ற முறையில் ஒற்றுமைப்படுத்துகின்ற முயற்சியில் இறங்க வேண்டும். அதன் மூலம் பல்வேறு பிரச்னைகளை இலங்கை திருநாட்டில் நாம் தீர்த்து வைக்க முடியுமாக இருக்கும்.

ஆன்மீக ரீதியிலும் பல்லின சமய அனுஸ்டானங்களை எல்லோரும் அறிகின்ற ஒரு சந்தர்ப்பத்தை இவ்வாறான இப்தார் நிகழ்வுகள் ஏற்படுத்தி இருக்கின்றன.

இவ்வாறான பணி எதிர்காலங்களில் தொடர்ந்தும் நடைபெற வேண்டும். பல்வேறு கோணங்களில் தமிழ் பேசும் சமூகங்களின் இளைஞர்கள் இதற்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அதன் ஊடாகவே சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதோடு எதிர்கால சந்ததிகளுக்காக சிறந்த தேசத்தை நாம் உருவாக்கி கொடுக்க முடியும்-என்றார்.(அ)

# சதுரங்கத்தில் வென்ற கல்முனை ஸாஹிரா




அம்பாறை, மார்ச் 26

விளையாட்டு அமைச்சு மற்றும் விளையாட்டு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான அம்பாறை மாவட்ட சதுரங்க போட்டி ஒலுவில் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் சாய்ந்தமருது பிரதேச செயலகம் சார்பாக கலந்து கொண்ட கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி அணியினர் மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு கிழக்கு மாகாண மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (அ)

# கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாகப் பிரச்னைக்கு தீர்வு காண்க!

## அனைத்து சிவில் சமூகம் ஏற்பாட்டில் போராட்டம்




அம்பாறை, மார்ச் 26

கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாகப் பிரச்னைக்கு தீர்வு காணுமாறு கோரி அனைத்து சிவில் சமூகம் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றலில் குறித்த போராட்டம் இடம் பெற்றது.

இந்த போராட்டத்தில் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர்.

இப்போராட்டம் தீர்வு கிடைக்கும் வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ)

# கண்ணகிபுரத்தில் பற்சிகிச்சை முகாம்



அம்பாறை, மார்ச் 26

உலக வாய் சுகாதார தினத்தையொட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய வாய் சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த பற்சிகிச்சை முகாம் அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் கண்ணகி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

“மகிழ்ச்சியான வாய் ஆரோக்கியமான உடல்” எனும் தொனிப் பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் வீ. பபாகரன், கல்முனை பிராந்திய தாய்சேய் நலன்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், ஆலையடி வேம்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பீ.அகிலன், பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.சரூக், கண்ணகி மகா வித்தியாலய அதிபர் ரீ.ராசநாதன் மற்றும் பல் மருத்துவர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றது. பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.சரூக், டாக்டர் ஹபீல் ஆகியோர் இக்கருத்தரங்கில் விரிவுரையாற்றினர். (அ)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அம்பாறையில்

அம்பாறை, மார்ச் 26

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதல்கள் வழங்கும் நிகழ்வு இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எச்.யூ. சுசந்தவின் நெறிப்படுத்தலில் தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

நிகழ்வுக்கு இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பசின்டு குணரத்ன, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இவர்களுடன் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா, அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் ஜெ.எச்.எம்.என். ஜெயபத்மா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான சமிக்க அமரசிங்க, இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை பிராந்திய பிரதிப்பணிப்பாளர் கங்கா சகரிக்க தமயந்தி, கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளர் மஜீட், இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளரும் பிரதிப்பணிப்பாளருமான ஏ.ஹமீர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ)



## மொஸ்கோ தாக்குதல் எதிரொலி:
# பிரான்ஸில் கடுமையான பாதுகாப்பு!

பாரிஸ், மார்ச் 26

**ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களை தொடர்ந்து பிரான்ஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.**

**பிரான்ஸில் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அடிப்படையில் இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.**

**குறிப்பாக ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தளங்கள் போன்ற பொது இடங்களில் ஆயுதப் படைகளின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.**

"பாரிஸில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு சில மாதங்களுக்கு முன்பு இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கான பொறுப்பை ஐ.எஸ் அமைப்பு ஏற்றுள்ளது. இதனால் பிரான்ஸில் பயங்கரவாத எச்சரிக்கையை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது." என அந்நாட்டு பிரதமர் கேப்ரியல் அட்டால் தமது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுடன் மூத்த பாதுகாப்பு அதிகாரிகளுடன் பல்வேறு ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் கேப்ரியல் அட்டால் சுட்டிக்காட்டியுள்ளார்.

ராய்ட்டர்ஸின் தகவலின் பிரகாரம், பிரான்சில் நடத்தப்பட்ட தாக்குதல்களால் ஐரோப்பாவில் பல நாடுகளில் பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் ஐ.எஸ் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 143 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 140 பேர் படுகாயம் அடைந்தனர்.

மொஸ்கோவின் புறநகர் பகுதியான கிராஸ்னோகோர்ஸில் "குரோகஸ் சிட்டி ஹால்" என்ற அரங்கம் உள்ளது. அங்கு "பிக்னிக்" என்ற ராக் இசைக் குழுவின் கச்சேரிக்கு ஏற்பாடு ஏற்பட்டிருந்தது. அரங்கத்தின் 7,500 இருக்கைகளும் ரசிகர்களால் நிரம்பி இருந்தன.



இரவு 8 மணிக்கு இசைக் கச்சேரி தொடங்க இருந்த நிலையில் திடீரென 4 தீவிரவாதிகள் தானியங்கி துப்பாக்கிகளுடன் அரங்கத்துக்குள் நுழைந்து நாலாபுறமும் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். தாக்குதல்களுக்கு உள்ளான 143 பேரே இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்த நிலையில் தாக்குதல்களை மேற்கொண்ட 4 தீவிரவாதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின்,

"மொஸ்கோ இசை நிகழ்ச்சியில் நடந்த தாக்குதல், ரத்தம் தோய்ந்த மற்றும் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத செயல்.

இதில் அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களை சுட்டுக் கொன்று பயங்கரவாத செயலில் ஈடுபட்ட 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் உக்ரைனுக்கு தப்ப முயன்றபோது தடுத்து நிறுத்தப்பட்டனர்.

பயங்கரவாதியாக இருப்பவர்கள், தாக்குதலுக்கு திட்டமிட்ட அனைவருக்கும் கடுமையான தண்டனை வழங்கப்படும்." எனக் கூறியுள்ளார். (அ)

# பிரான்ஸில் மரக் கடத்தல் சுற்றுச்சூழலுக்கு பேரழிவு

## சீனாவிற்கு விற்பனை என குற்றச்சாட்டு

பாரிஸ், மார்ச் 26

பிரான்ஸில் மரக்கடத்தல் அதிகரித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக காடுகள் அழிவடைந்து வருவதாக குறிப்பிடப்படுகிறது.

இதன்படி, கடந்த சில மாதத்திற்கு முன்புவரை காணப்பட்ட காடுகளில் ஒருபகுதி முற்றிலுமாக அளிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ள தரமான மரங்கள் களவாடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், மரங்களை வெட்டுவதன் மூலம் சுற்றுச்சூழல் மாசடைந்து வருவதன் காரணமாக மர கடத்தல்காரர்கள் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்திவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, பிரான்ஸின் ஒரு புலப்பரப்பில் உள்ள மரங்களை வெட்டுவதற்கு உத்தியோகபூர்வ அனுமதி பெற்ற உள்நாட்டு மரம் வெட்டும் நிறுவனம் ஒன்று இந்த கடத்தலுக்குப் பின்னால் இருப்பதாக அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த நிறுவனம் அனுமதி வழங்கப்பட்ட எல்லைகளை மீறி, முதலில் திட்டமிட்டதை விட கணிசமானளவு மரங்களை வெட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு களவாடப்பட்ட மரங்கள் சீனாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும், குறித்த மரங்கள் அங்கு தரை அமைப்புக்கு பயன்படுத்தப்படுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)



# உலகளாவிய ரீதியில் குழந்தை பிறப்பு சரிவு

## சனத்தொகையில் பாதிப்பு

நியூயோர்க், மார்ச் 26

உலகளாவிய ரீதியில் உள்ள மக்கள் இந்த நூற்றாண்டின் இறுதியில் பாரிய விளைவை சந்திக்க நேரிடும் என ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

2100இல் அனைத்து நாடுகளிலும் குழந்தை பிறப்பு வீதம் சரிவை சந்திக்கும் என அமெரிக்காவின் ட்ரெஜ் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது தெரியவந்துள்ளது.

இது ஒரு ஆபத்தான சூழ்நிலை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த ஆய்வுக்காக உலகளாவிய ரீதியில் எடுத்துக்கொள்ளப்பட்ட 204 நாடுகளுள் 198 நாடுகளின் சனத்தொகை எதிர்வரும் காலங்களில் குறைவடையும் எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதன்படி, உலக நாடுகளில் சனத்தொகையை தொடர முடியாத அளவுக்கு குழந்தை பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளது.

இதேவேளை, மிகவும் ஏழை நாடுகளில் அதிக குழந்தை பிறப்பு வீதங்கள் பதிவாகியுள்ளன.



2100 இல் சனத்தொகையை மேலும் தக்க வைத்துக்கொள்ளும் வாய்ப்பு சோமாலியா, டொங்கா, நைஜர், தஜிகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு மட்டுமே கிடைக்கப்பட்டுள்ளன.

உலகின் செல்வந்த நாடுகள் பொருளாதாரத்திலும் ஏழை நாடுகள் சனத்தொகை வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வருவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

மேலும், குழந்தை பிறப்பு வீதம் அதிகமான மற்றும் குறைவான நாடுகளாக என பிரித்துப் பார்க்க முடியும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# பிரேசிலை உலுக்கியது பெரும் புயல்

## 25பேர் உயிரிழப்பு

பிரேசிலியா, மார்ச் 26

பிரேசில் நாட்டின் தென் கிழக்கு பகுதியில் ஏற்பட்ட புயல் தாக்கத்தினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 25 ஆக உயர்வடைந்துள்ளது.

பிரேசில் நாட்டின் தென் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் கடுமையான புயல் தாக்கம் ஏற்பட்டது. ரியோ டி ஜெனிரோவின் மலைப்பகுதிகளில் புயலில் தாக்கம் அதிகமாக இருந்ததாகவும் இதனைத் தொடர்ந்து அங்கு கடும் மழை பெய்ததாகவும் சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

புயல் மற்றும் மழைத் தாக்கத்தினால் குறித்த பகுதியில் அமைந்துள்ள பல வீடுகள் சேதமடைந்ததோடு, 25 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. மேலும், நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



தற்போது குறித்த பகுதியில் மீட்பு நடவடிக்கைகள் தொடரும் நிலையில், அரசாங்கம் முகாம்களில் இருப்போருக்கான நிவாரணங்களையும் வழங்கி வருகிறது. மேலும், மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக பல ஆறுகள் பெருக்கெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலில் கடந்த சில தினங்களாக வரலாறு காணாத வகையில் கடுமையான வெப்பமான காலநிலை நீடித்து வந்த நிலையிலேயே, தற்போது அங்கு புயலின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. (அ)

# சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை அவசரமாக அழைத்துள்ள மைத்திரி

## வார இறுதியில் முக்கிய சந்திப்பு

**கொழும்பு, மார்ச் 26**

**வார இறுதியில் சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் கொழும்புக்கு அழைக்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.**

மிக முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், கட்சியின் அனைத்து அமைப்புகளின் பொறுப்பாளர்களும், கட்சியின் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வது கட்டாயம் என அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் சுதந்திரக் கட்சியின் தலைமையில் புதிய கூட்டணி அமைக்கப்படவுள்ளதாகவும், அதன் செயற்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவின் முயற்சியின் கீழ் உருவாக்கப்படும் புதிய கூட்டணியின் செயல்பாடுகளையும் ஏப்ரல் மாதத்தில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இந்த புதிய கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பால் தேநீர் விலை குறைக்கப்படும் !

கொழும்பு, மார்ச் 26

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை குறைப்புடன், ஒரு பால் தேநீரின் விலையும் 5-10 ரூபாவால் குறைக்கப்படும் என அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பாலின் விலையை வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில்-

3100 ரூபா முதல் விற்பனை செய்யப்படும் 1 கிலோ பால்மாவின் விலை 150 ரூபாவினால் குறைக்கப்படும். 1000 ரூபா தொடக்கம் 1200 ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்படும் 400 கிராம் இறக்குமதி செய்யப்பட்ட பால் மா



பொதியின் விலை 60 ரூபாவினால் குறைக்கப்படும்-என்றார்.

பால்மா விலைக்குறைப்பின் பலனை நுகர்வோருக்கு வழங்கும் பொருட்டு ஒரு கோப்பை பால் தேநீரின் விலையும் 5 ரூபா முதல் 10 ரூபா வரை குறைக்கப்படும் என அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# மதுவரி திணைக்களத்தின் வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 26


மதுவரி திணைக்களத்தின் வரி வருமானம் கடந்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 38.5 வீதம் அதிகரித்துள்ளதாக அதன் ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி தெரிவித்தார்.

மதுபானத்தின் விலை அதிகரிப்பு காரணமாக, கடந்த ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மது உற்பத்தி 657,000 லீற்றர் அளவில் குறைந்துள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் சட்டவிரோத மதுபானம் தொடர்பான சுற்றிவளைப்புகளை மேற்கொள்ள நாடளாவிய ரீதியில் விசேட குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி தெரிவித்தார்.(அ)

# பரதநாட்டிய அரங்கேற்றம் கொழும்பில்







கொழும்பு, மார்ச் 26

கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி முன்னாள் கணித ஆசிரியர் வீ.இராஜரத்தினம் தம்பதியரின் புதல்விகள் செல்விகள் கிரிஷிகா, ஆர்த்திகா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தமிழருவி சிவகுமாரன், சிறப்பு விருந்தினர் பாலசுந்தரி பிராதலிங்கம், நடன ஆசிரியை சிவநந்தி ஹரிதர்ஷன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (அ)

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தது





யாழ்ப்பாணம், மார்ச் 26

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பஞ்ச ராஜகோபுர மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று காலை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் பங்குனி உத்தர நன்னாளில் நடைபெற்றது.

நேற்று காலை 9.25 மணி தொடக்கம் முற்பகல் 10.33 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் துர்க்காதேவிக்கு பெரும் சாந்தி விழா நடைபெற்றது.

காலை 6.00 மணி முதல் 7.10 மணிவரை இராஜகோபுர கும்பாபிஷேகமும் காலை 9.25 மணி முதல் 10.33 மணிவரை மூலஸ்தான கும்பாபிஷேகமும் நடைபெற்றது. கடந்த 20 ஆம் திகதி காலை கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் ஆரம்பமானனதுடன் நேற்று முன் தினம் மாலை 2.00 மணி வரை அடியார்களுக்கு எண்ணெய்க்காப்பு சாத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு குவைத் அரசு தீர்மானம்

கொழும்பு, மார்ச் 26

குவைத்தில் வதிவிட வீசா காலத்தை மீறி நாட்டில் தங்கியிருந்து பணியிடங்களை விட்டு வெளியேறிய இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க குவைத் அமைச்சர் எமிர் ஷேக் மெஷல் அல் அஹமட் அல் ஜாபர் தீர்மானித்துள்ளார்.

குவைத் எமிர் ஷேக் மெஷால் அல்-அஹமட் அல்-ஜாபர் மற்றும் குவைத்துக்கான இலங்கைத் தூதுவர் காண்டீபன் பால சுப்ரமணியம் அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி நாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு அபராதம் அல்லது சட்டத் தடைகள் எதுவும் செலுத்தாமல் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது

இந்த பொதுமன்னிப்பு காலம் கடந்த 17 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது குவைத்தில் வீசா இன்றி சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை 19,620 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் சுமார் 5,000 இலங்கையர்கள் தற்போது இலங்கைக்கு திரும்புவதற்காக தூதரகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தூதுவர் தெரிவித்தார்.

(அ)

# பொலிஸாரிடம் சிக்கிக்கொண்ட மோட்டார் சைக்கிள் திருடர்கள்!

கொழும்பு, மார்ச் 26

மோட்டார் சைக்கிள்களை திருடி பாகங்களாகப் பிரித்து விற்பனை செய்யும் மோசடியில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது அவர்களிடம் இருந்து 116 மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடுகளை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அநுராதபுரம் ஸ்ரவஸ்திபுர, தம்புள்ளை கித்துல்ஹிதியாவ, மிரிஸ்கோனியா சந்தி மற்றும் ஹீன் மொரகொல்ல ஆகிய இடங்களில் வசிக்கும் 29 முதல் 44 வயதிற்கும் இடைப்பட்ட சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் பிரதேச புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

இந்த திருட்டு மோசடி சுமார் 10 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட இலக்கத் தகடுகளுடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள்களின் சட்டபூர்வ உரிமையாளர்களைக் கண்டறிவதற்காக இந்த விடயம் குறித்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படவுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நொச்சியாகம நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

(அ)

# ஈஸ்டர் தாக்குதலை விசாரித்த அதிகாரி தேசிய மக்கள் சக்தியில் இணைந்தார்

## அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

வன்கூவர், மார்ச் 26

ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரி ஒருவர், தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து முக்கிய பணியொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அந்த கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கனடா சென்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் வன்கூவரில் இலங்கை சமூகத்தினரை சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக புதிய விசாரணைகள் தேவையில்லை எனவும், விசாரணைகள் மூலம் எழுந்துள்ள பல பிரச்னைகள் குறித்து கண்டறியப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

ஏப்ரல்- 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை நடத்திய குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தற்போது ஓய்வு பெற்று தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்றிவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, விசாரணைகளை வழிநடத்திய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரி ஒருவர், எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள தேசிய மக்கள் சக்தியின் ஓய்வுபெற்ற காவல்துறை மன்றத்திற்கு தலைமை தாங்கவுள்ளார்.

அதனூடாக, குற்றவாளிகள் கண்டறியப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வழிசெய்யப்படும். தாக்குதல்களுக்கு காரணமானவர்களை தமக்கு நன்கு தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



தாக்குதலின்போது ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அவரது இந்த கருத்து மிகவும் பாரதூரமானதாகும்.

தாக்குதல்களுக்குப் பிறகும் அவர் ஏழு மாதங்கள் ஜனாதிபதியாக பணியாற்றியிருந்தார் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

# கோட்டாபய நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கையை இரத்து செய்தது நீதிமன்று

கொழும்பு, மார்ச் 26

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க மற்றும் பலர் தொடர்பில் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு வழங்கிய அறிக்கை, கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை இரத்துச் செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

உபாலி அபேரத்ன ஆணைக்குழு என பொதுவாக அழைக்கப்படும் அரசியல் பழிவாங்கல்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது. அவரது தரப்பினரை பாதுகாக்கவும், முன்னாள் அரசாங்கத்தை பழிவாங்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பு அது என்ற விமர்சனம் அப்போதே எழுந்திருந்தது.

இந்த நிலையில், தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றம் புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, நீதியரசர் எம்.டி.எம்.லஃபர் மற்றும் நீதியரசர் டி. எம். சமரகோன் ஒருமனதாக அரசியல் பழிவாங்கள் தொடர்பாக ஆராய் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் கண்டுபிடிப்புகள் சட்ட அதிகாரத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டவை என்று கூறினர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க, குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, ஜனாதிபதி சட்டத்தரணி ஜே. சி. வெலியமுன மற்றும் ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் இந்த எழுத்தாணை மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையாளர்களான ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன, ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சந்திரசிறி ஜயதிலக மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஆணைக்குழுவின் செயலாளர் பேர்ல் வீரசிங்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி. பி. ஜயசுந்தர பிரதிவாதிகள்.

2015, நவம்பர் 16 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு, நிதி குற்றப் புலனாய்வு, குற்றப் புலனாய்வு மற்றும் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரால் ஜனவரி 8ஆம் திகதி முதல் நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னணியில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பின்னணி குறித்து விசாரணை செய்யும் பணி இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அப்பொழுது கோட்டாபய அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, ரொனால்ட் பெரேரா மற்றும் எராஜ் டி சில்வா ஆகியோர் ஆஜராகினர். சரத் பொன்சேகாவுக்காக மல்லவாராச்சி அசோசியேட்ஸினால் அறிவுறுத்தப்பட்ட சட்டத்தரணி வினுர குலரத்ன மற்றும் ஜெசிகா அபேரத்ன ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி ஃபர்மன் காசிம் ஆஜரானார். சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மிலிந்த குணதிலக முன்னிலையானார்.

## தேர்தல்...

தண்டனையை அதிகரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், இளவயதினர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டால் பத்து ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டத் திருத்தங்கள் அனைத்தும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் குழு சுமார் நான்கு ஆண்டுகளாக நடத்திய ஆய்வின் பின்னரே முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கு பல்வேறு சமூக ஆர்வலர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்த சட்ட மூலத்தை எதிர்த்து சில தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இது தவிர, தேர்தல் திருத்த சட்ட மூலமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.1994 இல் சந்திரிகா ஜனாதிபதி வேட்பாளராக மூன்று தேர்தல் வாக்குறுதிகளை வழங்கினார். அது நிறைவேற்றதிகாரம் உடைய ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது, ஊழலை கட்டுப்படுத்துவது மற்றும் விகிதாசார வாக்களிப்பு முறையை நீக்குவது. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கு பொறுப்பான உறுப்பினர்களை தெரிவு செய்யவும் அங்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அரசமைப்பு பல தடவைகள் திருத்தப்பட்ட போதிலும், தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

19ஆவது அரசமைப்பு திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தது. அதுவரை, ஜனாதிபதி ஒரு கொலை செய்திருந்தாலும், அவர் மீது வழக்குத் தொடர முடியாமல் இருந்தது. ஆனால் 19ஆவது திருத்தம் அந்த நிலையை மாற்றியது. இதன்படி இதுவரை நான்கு ஜனாதிபதிகளுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும், ஊழலை தடுக்க சட்ட அதிகாரம் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி முதல் கீழ்நிலை அதிகாரி வரை சொத்துகள் மற்றும் பொறுப்புகளை கண்காணிக்கும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு உள்ளது. அந்த ஆணைக்குழு தொடர்பான பல திருத்தங்கள் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஊழல் கண்காணிப்பு ஆணைக்குழுவை ஒரு சுதந்திரமான நிறுவனமாக மாற்றுவதற்கு தேவையான சட்டத்தை இயற்றுவதே இதன் நோக்கமாகும்.

1994 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதித் தேர்தலின் போது ஒவ்வொரு தலைவர்களும் இது தொடர்பாக வாக்குறுதிகளை அளித்துள்ளனர். ஆனால் அந்த வாக்குறுதிகளை அந்த தலைவர்கள் யாரும் நிறைவேற்றவில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கீழ் இந்த ஆண்டு விகிதாசார தேர்தல் முறை மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்தும் வகையில் திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளின் தேர்தல் முறைகளில், தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தொகுதி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் செனட் சபை முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் நான் கருதுகிறேன்.

பாராளுமன்றத் தேர்தலில் திறமையானவர்களைக் காட்டிலும் பிரபலமானவர்கள்தான் அதிகமாக பாராளுமன்றத்துக்கு வருவார்கள். ஆனால் செனட் சபை முறையின் ஊடாக பிரபலமில்லாத திறமையானவர்களை பாராளுமன்றத்துக்கு நியமிக்கலாம்.

இதுவரையில் முன்வைக்கப்பட்ட தேர்தல் திருத்தங்கள் மூலம் தேர்தலை ஒத்திவைக்கும் திட்டம் இருப்பதாக சமூகத்தில் சில பேச்சுக்கள் எழுந்துள்ளன. ஆனால், இந்தத் திருத்தங்கள் மூலம் தேர்தலை ஒத்திவைக்க எதிர்பார்க்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் இரண்டு தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதன்போது எந்தவொரு வேட்பாளரும் இந்தத் தேர்தல் திருத்தம் குறித்து தங்கள் கருத்தை தெரிவிக்கலாம். பொதுமக்களுக்கும் இது தொடர்பாக தமது முடிவை எடுக்க முடியும்" - என்றும் கூறினார். (ஐ)

## மன்னார்...

விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார், வவுனியா, கொழும்பு, புத்தளம், அநுராதபுரம், குருநாகல், கம்பஹா, இரத்தினபுரி, களுத்துறை, காலி, கேகாலை ஆகிய மாவட்டங்க ளுக்கே வெப்ப நிலை அதிகரிப்பு எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் வெயிலில் செல்வதைத் தவிர்க்குமாறும் போதியளவு தண்ணீர் அருந்துமாறும் கடுமையான வேலைகளில் ஈடுபடுவோர் நிழலில் அடிக்கடி ஓய்வெடுக்குமாறும் முதியவர்கள், நோயாளிகளை அடிக்கடி பரிசோதிக் குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளை மற்றும் வெளிர் நிற ஆடைகளை அணியுமாறும் மக்களை கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

ஒருவரே அந்த வேட்பாளராக இருப்பார் என்றும் ஊடகங்களிடம் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, "எதிரணி உறுப்பினர்கள் கோப் குழுவில் இருந்து விலகுவதால் அந்தக் குழுவின் தலைமைப் பதவியை நான் துறக்கப்போவதில்லை. ஜனாதிபதி அல்லது ஆளும் கட்சி கோரிக்கை விடுத்தால் பதவி விலகத் தயார் - என்றும் கூறினார். (ஐ)

## கெஹலியவுக்கு...

கடந்த பெப்ரவரி 29ஆம் திகதி நடந்த நீதிவான் நீதிமன்ற நடவடிக்கைகள் உட்பட அனைத்து உண் மைகளையும் வெளிப்ப டுத்தத் தவறியதன் அடிப் படையில் இந்த விண்ணப் பத்தை நிராகரிக்குமாறு பிரதிசொலிசிட்டர் ஜென ரல் கூறினார்.

இதேசமயம், மனுதா ரர் சார்பில் முன்னி லை யான சட்டத்தரணி அதனை மறுத் தார். வழக்கு விசாரணை இன்னும் கிடைக் கவில்லை என்றும் கூறினார்.

இதைத் தொடர்ந்து வழக்கை ஏப்ரல் 3ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

மாளிகாகந்தை நீதிவான் பல தடவைகள் தனது தந்தைக்கு பிணை வழங்க மறுத்ததாகவும் - நியாயமான காரணங்கள் இன்றி விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார் எனவும் சமிந்திரி ரம்புக்வெல தனது விண்ணப்பத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தரமற்ற இம்யுனோகுளோபுலின் மருந்து இறக்குமதி தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய உட்பட கைது செய்யப்பட்ட 10 பேரும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மாளிகாகந்தை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரதான...

செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படவுள்ளனர்.

முன்னதாக இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம், கடந்த 11ஆம் திகதி இரவு பொன்னாலை கடற்படை முகாம் அருகே மோட்டார் சைக்கிளில் மனைவியுடன் வந்த இளம் குடும்பஸ்தர் கும்பல் ஒன்றால் கடத்தப்பட்டார். இந்தக் கடத்தலுக்கு கடற்படையும் உதவியதாகக் கூறப்படுகின்றது. மனைவியும் குடும்பஸ்தரும் தனித்தனி கார்களில் கடத்தப்பட்ட நிலையில், மனைவி சித்தங்கேணி சந்தியில் இறக்கிவிடப்பட்டார். இளம் குடும்பஸ்தர் படுகாயங்களுடன் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் மரத்தின்கீழ் தூக்கி வீசப்பட்டார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

# அரசியல் விளையாட்டை விடுத்து மகிந்த இனி ஓய்வு பெறவேண்டும்!

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 26

**மகிந்த ராஜபக்ஷ இனியும் அரசியல் விளையாட்டை விளையாடாமல் ஓய்வு பெற வேண்டும் என்றும், அதிகார பேராசை கொண்டவர்களின் மோசடியான செயற்பாடுகள் பொதுஜன பெரமுனவின் அப்பாவி உறுப்பினர்களை மீண்டும் சங்கடத்துக்கு உள்ளாக்கும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

ஐக்கிய குடியரசு முன்னணியின் கம்பஹா மாவட்ட மகா தொகுதி குடியரசு முன்னணியின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேலும் ஐந்து ராஜபக்ஷக்களை பாராளுமன்றத்துக்கு கொண்டு வருவதற்கு தேர்தலை நடத்துவதா? அல்லது கடனை மறுசீரமைத்து நாட்டை ஸ்திரப்படுத்துவதா?



என்பதை இந்த தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானிக்க வேண்டும்.

பணத்தை ஏமாற்றி ஆலயங்களுக்குச் செல்வதையும் புத்தரின் கட்டளையை விற்று உண்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# பிரதமர் தினேஷ் சீனா பயணம்!

கொழும்பு, மார்ச் 26

பிரதமர் தினேஷ் குணவர்தன சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன் தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டார்.

சீன அரசாங்கத்தின் விசேட அழைப்பின் பேரில் பிரதமர் தினேஷ் குணவர்தன ஐந்து நாட்களுக்கு சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின்போது பிரதமர் சீனா இலங்கைக்கு அளித்த கடனை மறுசீரமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடவுள்ளார்.

அவர் நேற்று முன் தினம் இரவு 08.20 மணியளவில் சீனா ஈஸ்டர்ன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சீனாவுக்குப் புறப்பட்டார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோரும் இந்த விஜயத்தில் இணைந்துள்ளனர்.

அவர்கள் சீன ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களைச் சந்திக்க உள்ளனர். (அ)

# திடீர் சுகவீனத்தால் மாணவன் மரணம்!

## களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

கொழும்பு, மார்ச் 26

களனி பல்கலைக்கழகத்தின் கன்னங்கர மாணவர் விடுதியில் இருந்த மாணவர் ஒருவர் அவசர சுகயீனம் காரணமாக கிரிபத்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கரமட்டிய போகஹபலஸ்ஸ படல்கு புர பகுதியைச் சேர்ந்த நிரோஷன் லக்மால் என்ற மாணவன் எனவும், குறித்த மாணவர் 04ஆம் ஆண்டில் (கலைப் பிரிவு) கல்வி கற்று வருவதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

இம்மாணவனின் மரணத்தை தொடர்ந்து, அந்த பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் காலை முதல் பல்கலைக்கழக நுழைவு வாயில்களை மூடிவிட்டு அதன் முன்பாக அமர்ந்தனர்.

மாணவர் விடுதியில் வலிப்பு நோயால் மாணவன் பாதிக்கப்பட்ட போது, நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் வாகனம் வழங்குவதற்கு நாற்பது நிமிடங்கள் ஆனதாக அவர்கள் கூறினர்.

எவ்வாறாயினும் ஆபத்தான நிலையில் இருந்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போதே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்ததாகவும், சில நிமிடங்களுக்கு முன்னதாக மாணவனை அழைத்து வந்திருந்தால் அவரின் உயிரை காப்பாற்றியிருக்கலாம் என தெரிவித்ததாகவும் மாணவர்கள் குறிப்பிட்டனர்.

காலதாமதத்துக்கு பல்கலைக்கழக நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறி மாணவர்கள் பல்கலைக்கழக வீதியில் தங்கி நிர்வாகத்தின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். (அ)




# யாழ். பல்கலைக்கழக மாணவர் கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 26

இணைந்த சுகாதாரக் கற்கைகள் மாணவர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யக் கோரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இணைந்த சுகாதாரக் கற்கைகள் பீட மாணவர்களினால் கவனயீர்ப்புப் போராட்டமானது நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட வளாகத்தில் ஆரம்பமாகி பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் நிறைவிற்கு வந்த குறித்த கவனயீர்ப்பானது, இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டதாரிகள் மீதான பரபட்சமான அசமந்தப் போக்கை உடன் நிறுத்தி அரச நியமனங்களை வழங்கக் கோரி முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் ஐந்து வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணத்தில் ஆஸ்துமாவுக்கு உரிய சிகிச்சை பெறாத சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

அராலி மத்தியைச் சேர்ந்த கிருபாகரன் சுலக்சன் (வயது 5) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

ஆஸ்துமாவால் சிறுவன் கடந்த ஒரு வார காலமாக அவதிப்பட்ட நிலையில் தனியார் மருத்துவமனையில் சேர்த்து பெற்றோர் மருந்து எடுத்துள்ளனர்.

ஆனாலும், அதைச் சிறுவனுக்கு வழங்கவில்லை.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை சிறுவன் நோயால் துடித்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்துள்ளான்.

மரண விசாரணைகளை திடீர் இறப்புவிசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

பெற்றோர் சிறுவனுக்கு உரிய சிகிச்சையளித்திருந்தால் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். (அ)

# கொஸ்கொட சுஜீ சிக்கினார்

கொழும்பு, மார்ச் 26

நாட்டின் முக்கிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவனாக அறியப்படும் 'கொஸ்கொட சுஜீ' ஐக்கிய அரபு இராச்சியத்தின் பாதுகாப்புப் பிரிவினரால் அபுதாபியில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பலனாக கொஸ்கொட சுஜீ கைது செய்யப்பட்டுள்ளார்.

கொஸ்கொட சுஜீ, இந்த நாட்டில் கொலைகள் உட்பட பல குற்றச் செயல்களில் ஈடுபட்டதுடன், கடந்த ஜனவரி 22ஆம் திகதி பெலியத்த பிரதேசத்தில் எமது ஜன பல கட்சியின் தலைவர் சமன் பெரேரா உட்பட 5 பேரைக் கொன்றதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

கொஸ்கொட சுஜீ அபுதாபியில் போலியான பெயரில் தங்கியிருந்தமை மேலும் தெரியவந்துள்ளது. (அ)

# கிழக்கு, தென் மாகாணங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, மார்ச் 26

கிழக்கு, தென் மாகாணங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேநேரம், தென் மாகாணத்திலும் மொனராகலை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் 100 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை மாவட்டத்தின் சில இடங்களிலும் மழை பெய்யக்கூடும். மேல், சபரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் இன்று மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் - என்று வளிமண்டலவியல் திணைக்களம் தனது காலநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பங்களாதேஷுடனான டெஸ்ட் இலங்கை மிகப்பெரும் வெற்றி!

சியல்ஹெட், மார்ச் 26

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கத்தால் இலங்கை அணி 328 ஓட்டங்களால் பெரு வெற்றி பெற்றது.

முதல் இன்னிங்ஸை போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர்களை இலங்கை வேகப்பந்து வீச்சாளர்கள் வேட்டையாடினர்.

நேற்றுமுன்தினம் - மூன்றாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது 47 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது பங்களாதேஷ் அணி.

நேற்று நான்காவது நாளில் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த பங்களாதேஷ் அணிக்கு மொமினுல் ஹக் பெரும் பலமாக அமைந்தார். அவர், மொமினுல் ஹக் 148 பந்துகளை சந்தித்து ஆட்டமிழக்காமல் 87 ஓட்டங்கள் எடுத்தார்.

எனினும், 50 ஓவர்கள்கூட பங்களாதேஷ் அணியால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மெஹிடி ஹசன் மிராஷ் மட்டுமே இரண்டாவது அதிகூடிய ஓட்டங்களான 33ஐ பெற்றார்.

பங்களாதேஷ் அணி 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 182 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

கசுன் ராஜித 56 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை வீழ்த்தினார். விஸ்வ பெர்னாண்டோ 3, லஹிரு குமார 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பங்களாதேஷ் சென்றுள்ள இலங்கை அணி இருபது - 20 தொடரை கைப்பற்றியது. ஒருநாள் தொடரை பங்களாதேஷ் வென்றது. இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை இரு அணிகளிடையேயுமான டெஸ்ட் தொடர் ஆரம்பமானது.

இலங்கை முதல் இன்னிங்ஸில் 280 ஓட்டங்களை பெற்றிருந்தது. தனஞ்சய சில்வா 102, கமிந்து 102 ஓட்டங்களை பெற்றனர்.



பதிலுக்கு ஆடிய பங்களாதேஷ் 188 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்ஸில் சுருண்டது.

இலங்கை இரண்டாவது இன்னிங்ஸில் 418 ஓட்டங்களை பெற்றது. கமிந்து 164, தனஞ்சய 108 ஓட்டங்களை பெற்றனர்.

511 என்ற சாத்தியமற்ற இலக்கை விரட்டிய பங்களாதேஷ் 182 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இந்த டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணியின் 20 விக்கெட்களையும் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர்களே கைப்பற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மும்பைக்கு எதிராக அதிக விக்கெட்கள்!

அகமதாபாத், மார்ச் 26

மும்பை அணிக்கு எதிராக அதிக விக்கெட்களை கைப்பற்றிய வீரர் என்ற பெருமையை பிராவோவுடன் பகிர்ந்துள்ளார் மோகித் சர்மா.

ஐ. பி. எல். தொடரில் மும்பை - குஜராத் மோதிய போட்டியில் குஜராத் வெற்றி பெற்றது.

இந்த போட்டியின் கடைசி கட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மோகித் சர்மா சிறப்பாக பந்து வீசினார். அவர் 2 விக்கெட்கள் கைப்பற்றினார். இதன்மூலம் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக 33 விக்கெட்கள் கைப்பற்றினார்.

இதற்கு முன்னதாக டுவைன் பிராவோ 33 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். தற்போது மோகித் சர்மா பிராவோ உடன் மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிராக அதிக விக்கெட்கள் வீழ்த்திய பந்து வீச்சாளர் என்ற சாதனையை பகிர்ந்தள்ளார்.

அஸ்வின் 26 விக்கெட்களும், சாஹல், சாவ்லா, அமித் மிஸ்ரா ஆகியோர் தலா 25 விக்கெட்களும் வீழ்த்தியுள்ளனர். (ஐ)



# மும்பையை 6 ஓட்டங்களால் வீழ்த்தியது குஜராத் அணி!




அகமதாபாத், மார்ச் 26

அகமதாபாத்தில் நடைபெற்ற ஐ. பி. எல். ரி - 20 ஆட்டத்தில் ஆறு ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது குஜராத் டைட்டன்ஸ் அணி.

ஐ. பி. எல். ரி - 20 கிரிக்கெட் தொடரில் அகமதாபாத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் டைட்டன்ஸ் அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கிய ரிதிமான் சாஹா 19 ஓட்டங்களும், அணித்தலைவர் ஷுப்மன் கில் 31 ஓட்டங்களும் எடுத்தனர். அடுத்து இறங்கிய சாய் சுதர்சன் 45 ஓட்டங்கள் எடுத்தார்.

அஸ்மத்துல்லா 17 ஓட்டங்கள், டேவிட் மில்லர் 12 ஓட்டங்கள், விஜய் ஷங்கர் 6, ராகுல் டேவாட்டியா 22 என 20 ஓவர்களில் 168 ஓட்டங்கள் எடுத்திருந்தது குஜராத் டைட்டன்ஸ்.

168 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸுக்கு இஷான் கிஷன் மற்றும் ரோஹித் சர்மா இருவரும் தொடக்கம் கொடுத்தனர். இதில் இஷான் கிஷன் 0 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறவே, ரோஹித் 43 ஓட்டங்கள் நின்று ஆடினார்.

நமான் திர் 20 ஓட்டங்கள், டெவால்ட் பிரேவிஸ் 46, திலக் வர்மா 25, ரிம் டேவிட் 11 என சென்று கொண்டிருந்த ஆட்டத்தில், 8 பந்துகளில் 19 ஓட்டங்கள் என்ற அழுத்தத்துடன் இறங்கினார் அணித்தலைவர் ஹார்திக் பாண்டியா. முதல் பந்திலேயே சிக்ஸர், இரண்டாவது பந்தில் பௌண்ட்ரி என்று பறக்கவிட்டு அசத்தினார். ஆனால், அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து ஷாம்ஸ் முரளி, பியூஸ் சாவ்லா என விக்கெட்கள் விழ இறுதியில் ஆறு ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணியிடம் மும்பை இந்தியன்ஸ் அணி தோல்வியடைந்தது.

2013ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரை மும்பை இந்தியன்ஸ் அணி தனது முதல் ஆட்டத்தில் ஒருமுறை கூட வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# லக்னோவை வீழ்த்தியது ராஜஸ்தான் றோயல்ஸ்!

ஜெய்ப்பூர், மார்ச் 26

ஐ. பி. எல். லீக் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணியை வீழ்த்தியது.

ராஜஸ்தான் வீரர்கள் சஞ்சு சாம்சன், ரியான் பராக் ஆகியோர் அபாரமாக விளையாடி ஓட்டங்களை குவித்தனர்.

இந்த ஆட்டம் ஜெய்ப்பூரிலுள்ள சவாய் மான் சிங் மைதானத்தில் நேற்றுமுன்தினம் பகல் நடைபெற்றது.

இதில் முதலில் விளையாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 193 ஓட்டங்களை குவித்தது.

தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ஜோஸ் பட்லரும், யஷஸ்வி ஜெய்ஸ்வாலும் அதிரடியாக விளையாடினர். ஆனால், ஜோஸ் பட்லர் 9 பந்துகளில் 11 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், நவீன் உல் ஹக் பந்தில் கே. எல். ராகுலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். யஷஸ்வி ஜெய்ஸ்வால் 12 பந்துகளில் 24 ஓட்டங்கள் (ஒரு சிக்ஸர், 2 பௌண்ட்ரி) எடுத்து, மோசின் கான் பந்தில், குர்ணல் பாண்ட்யாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த அணித்தலைவர் சஞ்சு சாம்சனும், ரியான் பராக்கும் இன்னிங்ஸை கட்டமைத்தனர்.

ரியான் பராக் 29 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்து நவீன் உல் ஹக் பந்தில் வீழ்ந்தார். ஷிம்ரன் ஹெட்மேயர் 5 ஓட்டங்களில் அரங்கம்திரும்ப, சஞ்சு சாம்சனுக்கு துணையாக துருவ் ஜூரெல் 12 பந்துகளில் 20 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

சாம்சன் 52 பந்துகளில் 82 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். லக்னோ அணி தரப்பில் நவீன் உல் ஹக் 2, மோசின் கான், ரவி பிஷ்னோய் ஆகியோர் தலா ஒரு விக்கெட் சாய்த்தனர்.

பின்னர், 194 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் லக்னோ அணி விளையாடத் தொடங்கியது.

கே. எல். ராகுலுடன் தொடக்க ஆட்டக்காரராக குயின்ரன் டி கொக் களமிறங்கினார். ஆனால், குயின்ரன் டி கொக் 4, தேவ்தத் படிக்கல் 0 ஓட்டங்களில் டிரெண்ட் போல்ட் பந்தில் வீழ்ந்தனர். அடுத்து வந்த ஆயுஷ் பதோனி ஓர் ஓட்டத்தில் நந்த்ரே பர்கர் பந்தில் ஜாஸ் பட்லரிடம் பிடி கொடுத்து பெவிலியன் திரும்பினார்.

பின்னர் 4ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த தீபக் ஹூடா, ஓரளவுக்கு நிலைத்து விளையாடினார். அவர் 26 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ராகுலுடன் நிக்கோலஸ் பூரண் ஜோடி சேர்ந்து அதிரடியாக பந்துகளை பறக்கவிட்டார்.

இருவரும் வேகமாக ஓட்டங்களைக் குவித்ததால் லக்னோ வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால், ராகுல் 58 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சந்தீப் சர்மா பந்தில் துருவ் ஜூரெலிடம் பிடி கொடுத்து வீழ்ந்தார்.

கடைசி ஓவர்களில் நிக்கோலஸ்பூரன் அதிரடியாக விளையாட முயற்சி செய்தார். ஆனால், 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 173 ஓட்டங்களை மட்டுமே அந்த அணியால் எடுக்க முடிந்தது. பூரண் 64 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் வெற்றி கண்டது. ஆட்டநாயகனாக சஞ்சு சாம்சன் தேர்வு செய்யப்பட்டார்.

ராஜஸ்தான் சார்பில் போல்ட் 2, நந்த்ரே பர்கர், அஸ்வின், சாஹல், சந்தீப்சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட் சாய்த்தனர். (ஐ)

ஈழநாடு



# மொஸ்கோ இசை அரங்க படுகொலை: ரஷ்யாவில் மீள 'ஐ.எஸ்.ஐ.எஸ்' தீவிரவாதம்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஒரு வாரத்திற்கு முன்பாக, ரஷ்யாவில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் வேளையில், அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் தூதரகங்கள் மாஸ்கோவில் பயங்கரவாத தாக்குதல் சாத்தியம் குறித்து எச்சரிக்கையை வெளியிட்டமை குறிப்பி டத்தக்கது.

தேர்தல் முடிந்து ரஷ்ய அதிபராக விளாடிமிர் புட்டின் நாட்டின் மீது தனது பிடியை உறுதிப்படுத்திய சில நாட்களுக் குப் பிறகு ஒரு வெளிப்படையான பயங்கரவாத தாக்குதல் தற்போது இடம்பெற் றுள்ளது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் மாஸ்கோவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் இதுவாகும். உயிர்ச் சேதத்தின் அளவு அதிகமாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் நன்றாகத் திட்டமிடப் பட்டு நிறைவேற்றப் பட்டுள்ள ஒரு தாக் குதல் இது.

**இசை அரங்க படுகொலை:**

மாஸ்கோவில் இசைக் கச்சேரி அரங்கில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 160 பேர் கொல்லப்பட்டதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரஷ்யாவில் உள்ள "க்ராஸ்னோகோர்ஸ்க்" நடந்த ரொக் இசை நிகழ்ச்சியின் போது துப்பாக்கி ஏந்திய ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தி னர்.

துப்பாக்கி ஏந்திய நபர்கள் பொது மக்களை நோக்கி சுட்டதில் 160 பேர் கொல்லப்பட்டதுடன், 200 க்கும் மேற் பட்டோர் காயமடைந்தனர் என்று ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனமான "ராஸ்", ரஷ்யாவின் உயர்மட்ட உள்நாட்டு பாது காப்பு நிறுவனமான பெடரல் செக்யூரிட்டி சர்வீஸை மேற்கோள் காட்டி தெரி வித்துள்ளது.

ரஷ்ய தலைநகரின் வடக்கில் உள்ள க்ராஸ்னோகோர்ஸ்க் புறநகரில், உள்ள ஒரு பெரிய அரங்கில் "பிக்னிக்" என்ற ராக் இசைக்குழுவின் கச்சேரியில் கலந்து கொண்ட கூட்டத்தின் மீது மூன்று முதல் ஐந்து பேர் வரை ஆயுதங்களால் சுட்ட தாக ரஷ்ய ஊடகங்கள் முதலில் தெரிவித்துள்ளன.




6,000 பேருக்கு மேல் தங்கக்கூடிய மண்டபத்தில் பிரபல ரஷ்ய ராக் இசைக் குழுவான பிக்னிக்கின் இசை நிகழ்ச்சிக் காக மக்கள் கூடியிருந்தபோது இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

துப்பாக்கிச் சூடு நடத்தியநுடன் கையெறி குண்டு, தீக்குண்டு வீசியதால் கச்சேரி அரங்கில் தீ வேகமாக பரவியது. அந்த மண்டபத்தில் இருந்தவர்கள் 15 அல்லது 20 நிமிடங்கள் துப்பாக்கிச் சூட்டில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தரையில் வீழ்ந்து உயிரை காப்பாற்றினர்.

ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நிலைமை குறித்து தொடர்ந்து தகவல்களை பெறுகிறார் என்று அவரது செய் தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறினார். தாக்குதலின் பின்னர் என்ன நடக்கிறது மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்கு தொடர்புடைய அனைத்து சேவைகளும் தொடர்ந்து தெரிவிக்கப்படுகின்றன என்று பெஸ்கோவ் ரஷ்ய செய்தி நிறுவனங்களுக்கு தெரிவித்தார்.

**பயங்கரவாதச் செயல் என்று கண்டனம்:**

மாஸ்கோ மேயர் செர்ஜி சோபியா னின் ரஷ்ய தலைநகரில் இந்த வார இறுதியில் திட்டமிடப்பட்ட அனைத்து பொது நிகழ்வுகளையும் ரத்து செய்வதாக அறிவித்தார். இந்த துப்பாக்கிச் சூட்டை "பயங்கரவாதச் செயல்" என்றும் தெரிவித் தார்.

ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மரியா ஜகரோவா, இந்த சம்பவத்தை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும் என்றும், இது ஒரு கொடூரமான குற்றம் என்றும் கூறினார். ரஷ்ய தலை




நகரில் நடந்த துப்பாக் கிச் சூட்டின் படங்கள் "பயங்கரமானவை மற்றும் பார்ப்பதற்கு கடினமானவை" என்று வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

இச்சம்பவத்தில் உக்ரைனுக்கு எதுவித தொடர்பும் இல்லை என உக்ரைனின் ஜனாதிபதி உதவியாளர் பொடோலியாக் தனது டெலிகிராம் சேனலில் கூறியுள்ளார்.

**இஸ்லாமிய குழு உரிமை கோரல்:**

இத்தாக்குதல்களுக்கு ஐஎஸ்ஐஎஸ்- கே உரிமை கோரியதாக மேற்கத்தய ஊடக வலைத்தளங்களில் காணக் கூடியதாக இருந்தது. ஆயினும் இத் தாக்குதலை நடத்தியவர்கள் ரஷ்யாவின் வடக்கு காக்ஸஸ் பிராந்திய ஆயுதக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் என்று தாங்கள் நம்புவதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் செச்சின்யா, இங்குஷெட்டியா ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியான வடக்கு காக்ஸஸைச் சேர்ந்த ஆயுதக் குழுக்களுக்கு இந்த தாக்குதல்களுக்கு ஏதாவது தொடர்பு இருக்கிறது என்று








தாம் ஆராய்வதாக ரஷ்யாவின் முக்கிய உளவுத்துறை தெரிவித்துள்ளது.

மாஸ்கோவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு உரிமை கோரும் குழு ஆப் கானிஸ்தானில் உள்ள இஸ்லாமிய அரசு கொராசன் மாகாண ISIS-K எனும் அமைப்பு ஆகும்.

**பாகிஸ்தான் தலிபானால் உருவாக்கம்:**

இந்த ஐளுஐளு-மு 2015 ஆம் ஆண் டில் பாகிஸ்தானிய தலிபானின் அதிருப்தி உறுப்பினர்களால் நிறுவப்பட்டது. அமெரிக்க வான்வழித் தாக்குதல்கள் மற்றும் ஆப்கானிய கமாண்டோ தாக்கு தல்களில் அதன் தலைவர்கள் பலரைக் கொன்றதன் மூலம் 2021 ஆம் ஆண்டளவில் அதன் அணிகள் சுமார் 1,500 முதல் 2,000 போராளிகளாகக் குறைக்கப்பட் டது.



2021 ஆண்டு ஆப்கானிஸ்தான் அர சாங்கத்தை தலிபான்கள் கவிழ்த்தவுடன், அமெரிக்க இராணுவம் வெளியேறியது. ஆகஸ்ட் 2021 இல் காபூலில் உள்ள சர்வ தேச விமான நிலையத்தில் இந்தக் குழு ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியது, அதில் 13 அமெரிக்க துருப் புக்கள் மற்றும் 170 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல் அக்குழுவின் சர்வதேச சுயவிவரத்தை உயர்த்தியது. இது தலிபானின் ஆளும் திறனுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக அமைந்தது. அப்போதி ருந்து, தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் இதற்கு எதிராக போர் தொடுத்து வருகின்றனர்.

**ரஷ்யாவை பழிவாங்க முயற்சி:**

இந்த மாத தொடக்கத்தில், மாஸ்கோ வில் திட்டமிடப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் பற்றிய தகவலை அமெரிக்க அரசாங்கம் எச்சரித்து இருந்தது. இத் தாக்குதலின் மூலம் ஐ.எஸ்.ஐ.எஸ் அதன் வெளிப்புற செயல்பாடுகளை தெளிவாகக் காட்ட முயல்கிறது.

இவ்வருட ஜனவரி மாதம் தனது அதி காரப்பூர்வ டெலிகிராம் பதிவில், ஐஎஸ்ஐஎஸ்-கே, ஈரானின் கெர்மானில் கொல்லப்பட்ட ஒரு ஈரானிய தளபதி மேஜர் ஜெனரல் காசிம் சுலைமானியின் நினைவு ஊர்வலத்தின் போது 84 பேரைக் கொன்ற குண்டுவெடிப்புத் தாக்குதலின் பின்னணியில் இருப்பதாகக் கூறியது.

ஈரானை பலமுறை அச்சுறுத்தி வரும் ஐஎஸ்ஐஎஸ்-கே, அங்கு நடந்த பல தாக் குதல்களுக்கு பொறுப்பேற்று உள்ளது. இப்போது மாஸ்கோவில் நடந்த தாக்குதலுக்கு இக்குழு பொறுப் பேற்றுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐஎஸ்ஐஎஸ்-கே ரஷ்யாவில் தீவிரமாக செயற்படுகிறது என தெரிவிக்கப்படுகி றது.

ஆப்கானிஸ்தான், செச்னியா மற்றும் சிரியாவில் மாஸ்கோவின் தலையீடுகளை எதிர்க்கும் வண்ணம், பழிவாங்கலாக இத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ் நடாத்தியுள்ளது. அத்துடன் கிரெம்ளினின் கைகளில் முஸ்லீம்களின் இரத்தம் இருப்பதாக குற் றம் சாட்டி, பழிவாங்கலாக இத் தாக்கு தலை ஐ.எஸ்.ஐ.எஸ் நடாத்தியுள்ளது. ●

# ராஜபக்ஷக்கள் ஏன் பொதுத் தேர்தலைக் கேட்கிறார்கள்?

நிலாந்தன்



ஜனாதிபதி தேர்தலை நோக்கித் தமிழ்க் கட்சிகள் துடிப்பாக உழைப்பதாகத் தெரியவில்லை. அது தொடர்பில் முதலில் கருத்து தெரிவித்தது குத்துவிளக்கு கூட்டணியைச் சேர்ந்த சுரேஷ் பிரம்மச்சந்திரன். ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று அவர் சில மாதங்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தார். அதன் பின் அவரும் இணைந்திருக்கும் குத்து விளக்கு கூட்டணி, மன்னாரில் நடந்த கட்சிகளின் கூட்டத்தில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவது என்று அறிவித்தது. அதற்கு ஆதரவாக விக்னேஸ்வரனும் கருத்து தெரிவித்திருந்தார். ஒரு பொது தமிழ் வேட்பாளராக நிற்பதற்குத் தான் தயார் என்றும் அவர் கூறியிருந்தார்.

இதே காலப்பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான் தேர்தலைப் பகிஸ்க்கரிக்கப் போவதாகக் கூறியது.

தமிழரசுக் கட்சி இன்று வரை தன் நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறவில்லை. எனினும் சாணக்கியன் பொதுத் தமிழ் வேட்பாளருக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தார். கட்சித் தலைமைப் பீடத்துக்கான தேர்தலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த காலகட்டம் அது என்பதனால் அக்கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் உத்தியோகபூர்வமாக அதுதொடர்பாக கருத்து எதையும் தெரிவித்திருக்கவில்லை. கட்சித் தலைமைக்கான தேர்தல் முடிந்த பின்னரும் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்க முடியாத ஒரு நிலைமை கட்சிக்குள் காணப்படுகின்றது. ஏனென்றால், ஒருமித்து உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை எடுக்க முடியாதபடி கட்சி நீதிமன்றத்தின் நிற்கின்றது.

இத்தகையதோர் பின்னணியில், அண்மையில், யாழ்ப்பாணத்தில், தந்தை செல்வா கலையரங்கில் ஒரு கருத்தரங்கு இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் டான் டிவியால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு சிவில் சமூகம் அக்கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியது. "மக்கள் மனு" என்று பெயரிடப்பட்ட அக்கருத்தரங்கில் ஜனாதிபதி தேர்தலுக்கான ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை முன்னிறுத்துவது தொடர்பாகவே பெருமளவுக்கு கருத்துக்கள் கூறப்பட்டன. கருத்தரங்கில் தமிழரசு கட்சித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட தலைவராகிய சிறீதரனும் பங்குபற்றினார். அவருமுட்பட அங்கு உரை நிகழ்த்திய பெரும்பாலான அரசியல் தலைவர்கள், ஒரு தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாகவே கருத்துத் தெரிவித்தார்கள்.

மக்கள் மனு என்ற பெயரிலான அந்த நிகழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் மேற்படி சிவில் சமூகமானது தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகளையும் சந்திக்க தொடங்கியுள்ளது.

ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை தமிழரசுக் கட்சி ஆதரிக்கவில்லை என்றால் குத்துவிளக்கு கூட்டணி அதில் அதிகம் ஆர்வமாக இருக்காது என்று தெரிகிறது. தமிழரசுக் கட்சி ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை ஆதரிக்குமாக இருந்தால் அது ஒரு பலமான நகர்வாக மாறும் என்ற அபிப்பிராயம் குத்துவிளக்கு கூட்டணிக்குள் இருக்கும் சில கட்சி முக்கியஸ்தர்கள் மத்தியில் காணப்படுகின்றது. தமிழரசுக் கட்சி அதில் இணையவில்லை என்றால் அந்த கோரிக்கை பெருமளவுக்கு வெற்றி பெறாது என்பது மட்டுமல்ல, அதில் கிடைக்கக்கூடிய தோல்வியானது, சில சமயம் குத்துவிளக்குக் கூட்டணியின் எதிர்காலத்தையும் பாதிக்கும் என்ற அச்சம் கூட்டணிக்குள் உள்ள சிலரிடம் உண்டு.

எனவே தமிழ் பொது வேட்பாளர் வெற்றி பெறுவாரோ இல்லையோ அதற்கு முன் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற கோரிக்கையின் வெற்றி என்பது பெருமளவுக்குத் தமிழரசுக் கட்சியின் முடிவில்தான் தங்கியிருக்கின்றது போலத் தெரிகிறது. தமிழரசு கட்சியோ தலைமைப் போட்டியால் தத்தளித்து கொண்டிருக்கிறது. ஒரு பொது முடிவை எடுக்க முடியாத கட்சியாக அது காணப்படுகின்றது. நீதிமன்றத்தில் இருந்து கட்சியை வெளியே எடுக்காத வரை ஒரு பொது முடிவை எடுக்க அவர்களால் முடியாது என்று தெரிகிறது.

இதுதான் தமிழ்த் தரப்பில் உள்ள நிலமை. அதே சமயம் சிங்களத்தரப்பைப் பொறுத்தவரையிலும் அங்கேயும் விளைவுகளை எதிர்வுகூற முடியாத ஒரு குழப்பமான நிலைமைதான் காணப்படுகின்றது. இப்போதுள்ள ஜனாதிபதி பொதுஜன பெரமுனவின் வாக்குப் பலத்தில் தங்கியிருப்பவர். ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷர்களின் பொது வேட்பாளர் ஆகவன்றி, தனித்து தன் சொந்தப் பலத்தில் நிற்பதற்கு அவர் தயாரில்லை என்று தெரிகிறது.

**தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் ஸ்திரமற்ற, நிச்சயமற்ற நிலைமைகளைக் கையாண்டு தன்னுடைய பேர வாய்ப்பை அதிகப்படுத்தும் விதத்தில், ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறங்கி விளையாடத் தமிழ்த் தரப்பு எந்தளவுக்குத் தயார்?**

உடைந்து போய் இருக்கும் அவருடைய கட்சியை ஒட்ட வைப்பது இன்றுவரை கடினமாகவே உள்ளது. எனினும், ஜேவிபி என்ற இடதுசாரி கட்சிக்கு எதிராக முதலாளித்துவ அரசியல்வாதிகள் ஒன்றிணைக்ககூடிய வாய்ப்புகள் இப்பொழுதும் உண்டு.

ஜேவிபியின் எழுச்சி என்பது ஒரு விதத்தில் இடது மரபுக்கு எதிரான முதலாளித்துவக் கட்சிகளை ஐக்கியப்படுத்தக்கூடியது. ஜேவிபியின் வாக்கு வங்கி எழுச்சி பெறுகிறது என்ற மதிப்பீடு மிகையானது என்ற கருத்து ஒருபுறமிருக்க, அது தொடர்பான பயம், அதற்கு எதிரான முதலாளித்துவக் கட்சிகளை ஒன்றிணைக்க வல்லது. 2022 இல் "அரகலய"வின் போது அதுதான் நடந்தது. மக்களின் தன்னெழுச்சியைக் கண்டதும் அரசியல் எதிரிகள் ஒன்றிணைந்தார்கள். மக்கள் தன்னெழுச்சியைத் தோற்கடிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்தி ராஜபக்சக்கள் அவருடைய மறைவில் பதுங்கிக் கொண்டார்கள்.

ஆனால் இப்பொழுது ராஜபக்சக்கள் தங்களை பலப்படுத்திக் கொண்டு விட்டதாக நம்புவதாகத் தெரிகிறது. அதன் வெளிப்பாடாகத்தான் அவர்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பொதுத் தேர்தலை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்று கொழும்பில் உள்ள ஊடக வட்டாரங்கள் கருதுகின்றன. அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பசில் ராஜபக்ச, ஒரு பொதுத் தேர்தலை முதலில் வைக்க வேண்டும் என்று கூறுகிறார். அதன் பின் மகிந்தவும் அதை வலியுறுத்தினார். ஒரு பொதுத் தேர்தலில் மக்கள் விருப்பம் என்னவென்பது துலக்கமாகத் தெரியவரும். அதன்பின் ஒரு ஜனாதிபதித் தேர்தலை வைக்கலாம் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஜனாதிபதி தேர்தலை முதலில் வைத்தால் அதில் வெல்லக் கூடிய கட்சி அல்லது கூட்டு, அடுத்தடுத்த தேர்தல்களை வைத்துத் தன் வெற்றியை மேலும் உறுதிப்படுத்த விளையும். அதாவது ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மக்களுக்கு ஒரு முற்கற்பிதமாக அமையுக்கூடும். அது அடுத்தடுத்த தேர்தல்களில் மக்களுடைய வாக்களிப்பு மனோநிலையின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடும். மாறாக, பொதுத்தேர்தலை முதலில் வைத்தால் மக்கள் எந்த விதமான முன் முடிவுகளும் இன்றி சுயாதீனமாக வாக்களிப்பார்கள் என்று பசில் நம்புகிறாரா?.

ஆனால் அவர் அவ்வாறு கூறுவது, மக்களுடைய முடிவு சுயாதீனமாக வெளிப்பட வேண்டும் என்பதற்காக அல்ல. ரணிலுக்கும் தங்களுக்கும் இடையிலான பேரத்தில் தங்களுடைய பேர பலத்தை அதிகப்படுத்துவதற்காகத் தான். ஒரு பொதுத் தேர்தல் வைத்தால் நிச்சயமாக ரணிலுக்கு எவ்வளவு கிடைக்கும் என்று கூற முடியாது. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதில் அவர் பெற்ற வெற்றிகள் எந்தளவுக்கு வாக்குகளாக மாறும் என்றும் எதிர்வு கூற முடியாது.

அதேசமயம் பொதுஜன பெரமுன நம்புகிறது, யுத்த வெற்றி வாக்குகள் தனக்கு இப்பொழுதும் கிடைக்கும் என்று. அவ்வாறு பொதுஜன பெரமுன ஒரு பொதுத் தேர்தலில் ரணிலை விட அதிக வாக்குகளை பெறுமாக இருந்தால், அது ரணிலுக்கும் அவர்களுக்கும் இடையிலான பேரபலத்தை மாற்றி அமைக்கும் என்று அவர்கள் கணக்குப் போடக் கூடும். எதுவாயினும், பொதுஜன பெரமுன தனது பேர பலத்தை அதிகப்படுத்த முற்படுகிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் ஒரு ஜனாதிபதித் தேர்தல் முதலில் வைக்கப்பட்டால் அதில் யார் வெல்ல கூடும் என்பதனை சரியாக கணிப்பிட முடியாத ஒரு நிலைமைதான் இப்பொழுது நாட்டில் காணப்படுகின்றது.

அது ஜேவிபியின் பலம் அதிகரித்து வருவதால் ஏற்பட்ட ஒரு நிச்சயமின்மை. எதிர்க்கட்சிகளுக்கு இடையே ஒரு பலமான ஐக்கியம் ஏற்பட முடியாததால் வந்த ஒரு நிச்சயமின்மை. பொதுஜன பெரமுனவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான பேர விளையாட்டு முடியாத காரணத்தால் வந்த ஒரு நிச்சயமின்மை.

அதாவது கூட்டிக் கழித்துப் பார்த்தால், ஜனாதிபதித் தேர்தலை முன்வைத்து தென்னிலங்கையில் பேரப் பேச்சுக்கள் முடிவுறாத காரணத்தால், நிலைமைகளைத் திட்டவட்டமாக எதிர்வு கூறுவது கடினமாக உள்ளது. அதே சமயம் தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் ஸ்திரமற்ற, நிச்சயமற்ற நிலைமைகளைக் கையாண்டு தன்னுடைய பேர வாய்ப்பை அதிகப்படுத்தும் விதத்தில், ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறங்கி விளையாடத் தமிழ்த் தரப்பு எந்தளவுக்குத் தயார்?

(ஆதவன் செய்தி)

# கிழக்கு பல்கலை நடத்தும் சர்வதேச ஆய்வு மாநாடு

மட்டக்களப்பு, மார்ச் 26

இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகமானது வவுனியா பல்கலைக்கழகம், ஆசிய மற்றும் தென்னாசியப் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றோடு இணைந்து “தமிழர்களின் கலை மற்றும் கலாசாரம்” என்ற தலைப்பில் சர்வதேச ஆய்வு மாநாடொன்றை எதிர்வரும் ஜூன் மாதம் 13, 14, 15 ஆம் திகதிகளில் கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தில் மிக விமர்சையாக நடத்தவுள்ளது. இந்த ஆய்வு மாநாட்டை கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார பீடத்தின் ஒத்துழைப்போடு தமிழ் கற்கைகள் துறை ஏற்பாடு செய்யவுள்ளது.

இந்த மாநாட்டின் இணைத் தலைமைகளாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம், வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் செயற்படுகின்றனர். மாநாட்டின் சர்வதேச ஒருங்கிணைப்பாளராக பாண்டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் பஞ். இராமலிங்கம் இணைப்பாளராக கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் சி. சந்திரசேகரம் செயலாளராக தமிழ் கற்கைகள் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி விஜிதா திவாகரன் செயல்படுகின்றனர். மாநாட்டுக் குழுவில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கம், வவுனியா பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளர் எஸ்.எஸ். சுதாகரன், பாண்டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் எம். கருணாநிதி, மொறிசியஸ் பல்கலைக்கழக பேராசிரியர் ராஜன் நரசிங்கன் அம்பிராஜன், றியூனியன் பல்கலைக்கழக பேராசிரியர் யோகாச்சாரி நீலமேகம், சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் மகாலிங்கம் ஆகியோர் பணியாற்றுகின்றனர். ஆதார சுருதி உரைகளை வாழ்நாள் பேராசி ரியர் அ. சண்முகதாஸ், தமிழக பேராசிரியர்கள் சிலரும் ஆற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டில் ஆசிய, தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த பல பல்கலைக் கழகங்களையும் உயர் கல்லூரிகளையும் சேர்ந்த அதிகமான புலமையாளர்கள் நேரடியாகப் பங்குபற்றவுள்ளமை சிறப்பம்சமாகும்.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள மாநாட்டில் முதல் நாள் ஆரம்ப நிகழ்வுகளோடு தமிழர்களின் பாரம்பரிய கலை பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தும் பல கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இரண்டாம் நாள் ஆய்வரங்குகள் நிகழ்த்தப்படும்.

# மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் குருளை சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு

மட்டக்களப்பு, மார்ச் 26

மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி வலயத்தில் குருளைச் சாரணர் பயிற்சியை நிறைவு செய்தார் ஆசிரியர்களுக்கு கலைக் கூறு 1 சின்னம் சூட்டும் நிகழ்வு குறிஞ்சா முனை பாடசாலை மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

ஜெயகரன் ஒழுங்கமைப்பில், மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் யோகேந்திரா ஜெயச்சந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், பிரதிக்கல்விப் பணிப்பாளர் சஜிவன், நிர்வாக உத்தியோகத்தர் தர்சினி, கொழும்பு தேசிய சாரணர் தலைமை காரியாலயத்தின் பயிற்றுனர் கே.பாரதி, பயிற்றுனர் உயகுமார், மாவட்ட குருளை சாரணர் தலைவர் பிரதீபன், சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர் என். ஜனார்த்தனி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவான 54 ஆசிரிய குருளைச் சாரணர்களுக்கு இதன் போது சின்னஞ் சூட்டி கழுத்துப் பட்டியும் அணிவிக்கப்பட்டது.

# இளநீர் ஏற்றுமதி மூலம் ரூ. 343.9 கோடி வருமானம்!

கொழும்பு, மார்ச் 26

இளநீர் ஏற்றுமதி மூலம், 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் சுமார் 343.9 கோடி ரூபாய் என தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையின் இளநீர் ஏற்றுமதி மூலம், கடந்த 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் 270. 5 கோடி ரூபாயாகும்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் ஈட்டப்பட்ட வருமானம் 73.4 ரூபாயாக அதிகரித்துள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார்.

